கோகுலம்

30-7-1978 விலை 60 காசு



சிரிப்பு



ஒரு பெண்: அதோ அந்த ஆட்டுக்கு இங்கிலீஷ் படிக்கத் தெரியும்னு தோணுது மீனு?

மீனு: எப்படிச் சொல்றே...?

அவள்: பாரேன்! ''யூஸ் மீ''ன்னு எழுதியிருக்கிற குப்பைத் தொட்டி மேலே போய் சொறிந்துக்கிறது...!

—ரமணி ரங்கநாதன்



''நேற்று நம்ப சீதா மின்சார சோதனையிலே இரண்டு காலே விட்டுட்டா.''

''ஐயோ...! அப்புறம் என்ன ஆச்சு?''


''ஒண்ணும் ஆகல்லே! **மின்சர சேதனை**ன்னு எழுதினதாலே சயன்ஸ் டீச்சர் கிட்டே அடி வாங்கினுள்...!''


—ரமணி ரங்கநாதன்

பட்டணத்துவாசி: இந்த முறை ஸம்மர் கிராப் ஒண்ணும் போடலீங்களா?

கிராமவாசி: (சற்று வெட்கத்துடன்) ஸம்மர் கிராப்பு நமக்கு புடிக்காதுங்க. குடுமிதான் நமக்குச் சவுகரியம்!

- புலவர் ராஜு





நண்பர்: என்னங்க, பிஸினஸ் எல்லாம் எப்படியிருக்கு?

கடிகாரக்காரர்: ஏதோ ஒரு மாதிரியா காலம் ஓடுதுங்க.

- ரமா ராமநாதன்



விருந்தாளி: என்னடாது...! உங்க வீட்டு நாய் எங்கேயோ சேற்றிலே காலே எல்லாம் அழுக்காக்கிட்டு அந்தக் காலோட என் மேலே வந்து விழுது...! பிடி! பிடி!

சிறுவன்: நேத்து நீங்க எங்கப்பா கிட்டே உங்களுக்கு நாய்னு **சுத்தமாப்** பிடிக்காதுன்னு சொல்லிக்கிட்டு இருந்ததை எங்க ஜிம்மி கேட்டுட்டுது போலிருக்கு மாமா!

— ரமணி ரங்கநாதன்



கலெக்டர்: சபாஷ்! எல்லாப் போட்டிகளிலேயும் முதல் பரிசுகளைத் தட்டிக் கொண்டு போய் விட்டாயே! உனக்குச் சொந்த ஊர் எது?

சுரேஷ்: 'எப்போதும்வென்றான்' சார்!


— என். மீனாட்சிசுந்தரம்


மலர் - 6 இதழ் - 11
ஜூலை 30, 1978.
காளயுக்தி - ஆடி 14

உயிர்களிடத்து அன்பு வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும் — பாரதியார்

கோகுலம்
சந்தா விபரம்:
இந்தியா:
ஒரு வருடம் — ஆறு மாதம்
ரூ. 15-00 — ரூ. 7-50
வெளி நாடுகள்:
ஒரு வருடம் ரூ. 40-00

காகிதத்திலே நத்தை செய்து பாருங்கள்!







3ல் புள்ளியிட்ட இடத்தில் மடித்துக் கொள்ளுங்கள்.

5ல் புள்ளியிட்ட பகுதியை கோட்டின் மேலாக உள் நோக்கி மடியுங்கள்.

6ல் நுனியைக் கொஞ்சம் வெட்டி ஒரு பாதியைக் கீழாக மடியுங்கள்.





நத்தை ரெடி!

நல்வழி

இயல்பலாதன செயேல்

அவரவர்கள் தகுதிக்கேற்றவாறு காரியங்களைச் செய்ய வேண்டும். மற்றவைகளைச் செய்யக் கூடாது என்பது பொருள்.

ஹிந்து மதத்திலே பிறப்பதிலிருந்து நல்ல குணங்களைப் பெறுவதிலிருந்து - புத்தி சக்தி — உடல் வலிமை இவைகளைப் பெறுவதிலிருந்து, ஒவ்வொரு வேலையையும் - காரியத்தையும் செய்வதற்குத் தகுதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படியுள்ளதை மாறிச் செய்யும்போது அதனால் நாட்டில் மக்களிடையே சண்டை - சச்சரவு - குழப்பங்கள் ஏற்பட்டுக் கஷ்டங்கள் வருகின்றன.



அரவமாடேல்

பாம்பை வைத்துக் கொண்டு அத்துடன் விளையாடாதே!... பரீக்ஷித் என்னும் அரசன் ஒரு சமயம் செத்த பாம்பை எடுத்து ஒரு மகரிஷியின் கழுத்தில் விளையாட்டாகப் போட்டான். அதனால் அந்த மஹரிஷியின் சாபம் ஏற்பட்டு அவன் தன் மனைவி - மக்கள் — ராஜ்யம் - ஆயுள் இத்தனையையும் இழந்தான். ஆகவே நாமும் அந்தவிதமான விளையாட்டில் இறங்கக் கூடாது என்பதைத் தெரிந்து நடந்து கொள்ள வேண்டும்.



இலவம் பஞ்சிற்றுயில்

பகல் முழுதும் கஷ்டப்பட்டு வேலை செய்கிறோம். இரவானதும் தூக்கம் தேவைப்படுகிறது. அப்படித் தூங்கும் போது, வெற்றுத் தரையில் படுத்துக் கொண்டால், உடம்பிலுள்ள சக்தியைப் பூமி இழுத்துக் கொள்கிறது. அதனால் வெறுந் தரைமேல் உட்காருவதோ - படுப்பதோ கூடாது. படுக்கும் போது சகல உறுப்புகளுக்கும் ஒய்வு கிடைக்கக் கூடிய வகையில், மேடு பள்ளமில்லாத சம தரையில் கட்டியாக இல்லாத இலவம் பஞ்சு மெத்தையில் படுத்தல் நல்லதென்று நீதி கூறுகிறது.



வஞ்சகம் பேசேல்

நாம் செய்யும் எந்த ஒரு செயலும், அடுத்தவருக்கு ஹிம்சை தரக்கூடிய முறையில் இல்லாதிருக்க யோசனை செய்து, அடுத்தவருக்கு இன்பம் தரக் கூடியதான நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். இராவணன் ராமபிரான் மாதிரி வேடம் போட்டுக் கொண்டு சீதையை ஏமாற்றினான்.

ஆகவே பேசுவது நயமாக — அழகாக மாத்திரமில்லாமல், செயலிலும் அது நன்மையாகவே அமைய வேண்டும். யாரைப் பற்றி வஞ்சகம் பேசுகிறார்களோ அவர்களுக்கு தீமை உண்டாவதுடன் வஞ்சகம் பேசுகிறவர்களுக்கும் நன்மை கிடையாது.



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்



அழகு - அலாதன செயேல்

அதாவது நல்ல காரியத்தைச் செய்ய முடியா விட்டாலும், தீய காரியத்தைச் செய்யாதே! ஒவ்வொரு செயலினும் ஒவ்வொரு தினுசான அழகு அடங்கியிருக்கிறது.

ஒருவன் சாமர்த்தியமாகவும் கவர்ச்சியாகவும் பேசினால், அவன் ரொம்ப அழகாகப் பேசினான் என்கிறோம்!

ஒருவன் நேர்த்தியாக உடை உடுத்திக் கொண்டு போனால், அவன் உடை அழகாக இருக்கிறது என்கிறோம்.

ஒருவன் கெட்டிக்காரத்தனமாக வியாபாரம் செய்வதைக் கண்டால், அவன் ரொம்ப அழகாக வியாபாரம் செய்கிறான் என்கிறோம்.

இதுபோல் போற்றும்படியாக ஒன்று இருந்தால், அங்கு அழகு என்ற சொல் உபயோகப்படுத்தப் படுகிறது. ஆகவே நல்ல காரியமெல்லாம் அழகு என்று சொல்லப்படுகிறது. அழகு இல்லாத காரியத்தைச் செய்யக் கூடாது. நல்லதைச் செய்ய முடிந்தாலும் முடியா விட்டாலும் செய், தீயனவற்றைச் செய்யாதே என்பது பொருள்.



அட!.. அப்படியா...?

கடல்நீரை வெறும் 'உப்புத் தண்ணீர்' என்று சொல்லிவிட முடியாது. 1346 கன மீட்டர் கடல் நீரில் 128 மில்லியன் டன் உப்புக் கிடைப்பதோடு, 45 டன் வெள்ளி, 25 டன் தங்கம் 7 டன் யுரேனியம், ஐந்து லட்சம் டன் சுண்ணாம்பும் இருக்கின்றன.

❊

பகலை விட இரவில் கப்பலின் எடை அதிகமாக இருக்கும். நிலவொளியின் ஆகர்ஷண சக்தி அதிகரிப்பதால் ஏற்படும் மாற்றம் இது.

❊

உலக அதிசயங்களில் ஒன்று பிரமிடுகள். சியோப்ஸ் என்ற பிரமிடு தவிர மற்ற எல்லாம் மாயமாய் மறைந்து விட்டிருக்கின்றன. எல்லாம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டவை.

❊

140 பவுண்டு எடையுள்ள ஒருவரது உடலில் ஏழு சோப்புக் கட்டிகள் தயாரிப்பதற்கான கொழுப்பு உள்ளது. 9000 பென்சில்கள் தயாரிக்கத் தேவையான கரி (கார்பன்) உள்ளது; சுமார் இரண்டு அங்குல ஆணி தயாரிக்க இரும்பு உள்ளது. 10காலன் தண்ணீர் உள்ளது.

❊

1966–ம் வருடம் தாஷ்கண்டில் (ரஷ்யா) பூகம்பம் ஏற்படுவதற்கு முன்னால் திடீரென்று ஒரு மின்னல் தோன்றிப் பல விநாடிகள் ஒளிவிட்டது. பூமியில் அதிர்வு ஏற்பட்டபோது உருவான மின் அணுக்கள் ஒரு ரேகையாகப் படர்ந்து விண்ணோக்கிச் சென்றதைத் தாஷ்கண்ட் மக்கள் பார்த்தார்கள். பூகம்பத்துக்கு முன் எச்சரிக்கை போல் மின்னல் மின்னியது அதுதான் முதல் முறை.

❊

இந்தியக் குடியரசு தினம் கொண்டாடப்படும் ஜனவரி 26-ந் தேதியன்று இன்னும் சில முக்கிய நிகழ்ச்சிகளும் நடந்துள்ளன.

ஃ முதன் முதலில் இந்தியாவில் ரயில் போக்குவரத்து ஏற்பட்டது. (வருடம்: 1853);
ஃ முதல் தந்தி வசதி ஏற்பட்டது. (வருடம் : 1862);
ஃ முதல் தொலைபேசி வசதி ஏற்பட்டது (வருடம் : 1888);
ஃ பம்பாய் உயர்நீதிமன்றம் திறக்கப்பட்டது. (வருடம் : 1862);
ஃ போர்பந்தர் ரயில்வே ஸ்டேஷன் கட்டி முடிக்கப்பட்டது. (வருடம் : 1884).

❊

மில்லியன், அடுத்தாற்போல் பில்லியன் என்று சாதாரணமாகச் சொல்லிவிட முடியாது. இந்தக் கணக்கைப் பாருங்கள்:

ஒரு மில்லியன் செகண்டுகள் = 12 நாட்கள்;
ஒரு பில்லியன் செகண்டுகள் = 32,000 வருடங்கள்.

-எம். எஸ்,

❊

குளிர்ந்த நீரைவிடச் சூடான நீரே சீக்கிரமாக உறையும்,

❊

ஒரு பாத்திரத்தில் உள்ள வெள்ளைப் பெயிண்டில் நான்கைந்து துளிகள் கறுப்புப் பெயிண்டைக் கலந்தால் வெள்ளைப் பெயிண்டின் வெண்மை பளீரென்று மேலும் அதிகரிக்கும்' கறுப்பு பெயிண்ட் துளிகள் ப்ளீச்சிங் ஏஜண்டாக மாறுவதுதான் காரணம்.

❊

கண்ணாடி திடப்பொருள் அல்ல. திரவப் பொருள். திடப் பொருள்களின் குணாதிசயங்கள் கண்ணாடிக்குக் கிடையாது.

❊

எண்ணெயும் தண்ணீரும் ஒன்று சேருமா..? துளி சோப்பைக் கலந்தால் சேர்ந்து கொள்ளும்.

கே. சரோஜா.



பாபா சொன்ன பாப்பாக் கதைகள்

ரா. கணபதி

நிறையப் பணம் வேண்டும் என்று ஒருவன் ஆசைப்பட்டான். அவனுக்கு ராமன் என்று பெயர் வைத்துக் கொள்ளலாம்.

இந்த ராமன் பணத்துக்காகத் தவிப்பதைப் பார்த்த அவனுடைய நண்பரொருவர், ''அப்பா, ராமா! வேங்கடரமண ஸ்வாமிக்குப் பூஜை செய்து வா. உன் ஆசை நிறைவேறும். அவருக்குத்தான் 'ஸ்ரீநிவாஸர்' என்றும் பெயர் இருக்கிறது.

'ஸ்ரீ—நிவாஸர்' என்றால் 'லக்ஷ்மி எவரிடம் வசிக்கிறாளோ அவர்' என்று அர்த்தம். எல்லா விதமான செல்வங்களையும் தருகிற லக்ஷ்மிதேவி வேங்கடரமணரின் மார்பிலேயே அமர்ந்திருக்கிறாள். அவர் கோயில் உண்டியில் எப்படிப் பணம் கொட்டியவாறு இருக்கிறது பார்! அவர் எத்தனை விலையுயர்ந்த ஆபரணங்களுடன், தங்க விமானத்தின் கீழ், நித்திய உத்ஸவராக இருக்கிறார், பார்! அதனால் அவரை ஆராதித்தாயானால் உனக்கு நிரம்பப் பணம் கிடைக்கும்'' என்றார்.

சங்கடம் வந்தால் ''வேங்கடரமணா'' என்பது வழக்கம்தானே?

நம் ராமனும் உடனே ஒரு வேங்கடாசலபதியின் படத்தை வாங்கி, அர்ச்சனை, தூபம், தீபம், நைவேத்தியம் எல்லாவற்றுடனும் அமர்க்களமாகப் பூஜை செய்ய ஆரம்பித்தான்.

ஒருநாள், இரண்டு நாள், ஒரு வாரம், இரண்டு வாரம், ஒரு மாதம் என்று காலம் போய்க் கொண்டே இருந்தது. ராமன் தினமும் பூஜை பண்ணிக் கொண்டிருந்தான். ஆனால் அவன் விரும்பிய பலன்தான் கிட்டவில்லை. அதாவது பணம் கிடைக்கவில்லை.

எப்படிக் கிடைக்கும்? ஒவ்வொருவரும் செய்த பாப — புண்ணியங்களுக்கு ஏற்றபடிதான் நல்லதும் கெட்டதும் உண்டாகும். பாப கர்மம் போனால்தான் நன்மை கைகூடும். பகவானின் கருணையில் விடாத நம்பிக்கையோடுகூட பக்தி செலுத்திக் கொண்டே வந்தால்தான் மெல்ல மெல்ல அவர் பாப கர்மாவைப் போக்கி நலன் அருளுவார்.

நம் ராமனுக்கு இந்த நம்பிக்கை இருந்ததா? இல்லை. முதல் தினம் பூஜை செய்தவுடனேயே பலன் கிடைத்துவிட வேண்டும் என்று ஆத்திரப்பட்டான். ''நாம் தெரிந்தும், தெரியாமலும் இந்த ஜன்மத்திலும், முந்தைய ஜன்மங்களிலும் எவ்வளவோ பாபம் பண்ணியிருப்போம். அதவ்வளவையும் நாம் ஒரே ஒரு வேளை பூஜை செய்து விட்டதற்காக ஸ்வாமி போக்கடிப்பாரா? சிரத்தை குறையாமல் பூஜையைத் தொடர்ந்து கொண்டே போனால்தான் முடிவில் அவர் அருள் புரிவார்.'' என்ற நல்லறிவு அவனுக்கு இல்லை.

முதல் நாள் பூஜையில் அவனுக்கு இருந்த ஈடுபாடு இரண்டாம் நாள் இல்லை. போகப் போக ஒவ்வொரு தினமாகச் சிரத்தை குறைந்து கொண்டே வந்தது. பக்தி நாளுக்கு நாள் அதிகமாவதற்குப் பதில் வேங்கடரமணனின் மேல் அவனுக்குக் கோபமே உண்டாக ஆரம்பித்து விட்டது. பணத்தை

வேண்டும் தன்னையே பணம் செல விட்டுப் பூஜை செய்யுமாறு செய்து விட்டு ஒரு பலனும் தராமலிருக்கிறார் என்று பெருமாளிடமே கோபம் கொண்டான்! பலன் எப்படிக் கிடைக்கும்? பூஜையால் பாபத்தைப் போக்கிக் கொள்வதற்குப் பதில் பெருமாளிடமே கோபப்பட்டுப் பாபத்தை அதிகமாக அல்லவா ஆக்கிக் கொண்டு விட்டான்?

இச்சமயத்தில் அவன் சந்தித்த ஒருவரிடம் வேங்கடரமணர் தன்னை ஏமாற்றுவதாகக் குற்றம் கூறினான்.

அந்த மனிதர் ஒரு வீர சைவர். அதாவது சிவபெருமானை மட்டுமே தெய்வம் என்று கருதிப் பூஜிப்பவர்; மற்ற தெய்வங்களை இழிவாக எண்ணுபவர்.


எனவே அவர் ராமனிடம், ''வேங்கட ரமணரைப் பூஜை செய்தால் எப்படிப் பயன் கிடைக்கும்? சிவபெருமானைப் பூஜித்து வந்தால் தான் உடனே நன்மை உண்டாகும். 'ஆசு – தோஷி', அதாவது 'பிரார்த்தித்தவுடனே மகிழ்ச்சியடைந்து வரம் கொடுப்பவர்' என்று ஈச்வரனுக்குத் தான் பெயர். பணம் முதலான சம்பத்துக்களுக்கே 'ஐச்வரியம்' என்று தானே பெயர்? ஈச்வரனிடம் எது உள்ளதோ அதுதான் ஐச்வரியம். அதனால், இதுவரை விஷ்ணுவான வேங்கடாசலபதியைப் பூஜித்து தப்பு செய்த நீ இப்போதாவது திருத்திக் கொண்டு ஈச்வரனைப் பூஜிக்க ஆரம்பி'' என்றார்.

ஒரே பரமாத்மாதான் விஷ்ணு, சிவன், முருகன், பிள்ளையார், லஷ்மி, ஸரஸ்வதி, பார்வதி முதலான எல்லா உருவங்களாகவும் வருகிறது. எந்த உருவத்தை நாம் பூரண நம்பிக்கையோடு வழிபட்டாலும் உரியகாலத்தில் நற்பயன் உண்டாகும். எனவே பயன் கிடைக்காவிடில் நம் நம்பிக்கைக் குறைவே அதற்குக் காரணம் என்று புரிந்து கொள்ள வேண்டுமேயன்றி நாம் பூஜித்த தெய்வ உருவம்தான் உபயோகமற்றது என்ற தவறான முடிவுக்கு வரக்கூடாது.

ஆனால் நம் ராமன் என்ன நினைத்தான்? தனக்கு அருள் செய்யாத பெருமாள் உபயோகமில்லை என்று நினைத்து விட்டான். உபயோகமில்லை என்பது மட்டுமில்லை; உண்மையில் அப்படி ஒருவர் இருக்கிறாரா என்றே சந்தேகப்பட்டான். ஓரிரு தினங்கள் பூஜை செய்ததில் பலன் ஏற்படாதவுடனேயே, ''பெருமாள் என்றே ஒருத்தர் இல்லையோ, என்னவோ? இந்தப் படம் வெறும் காகிதம்தானே. இதற்குள்ளே பெருமாள் இருக்கிறார் என்று நினைத்து நான் தூப தீபம் காட்டுவதெல்லாமே மடமைதானோ?'' என்று எண்ண ஆரம்பித்துவிட்டான்.

இதனால் சைவரின் வார்த்தையைக் கேட்டவுடன் வேங்கட ரமண பூஜையை நிறுத்தி விட்டான்.

அவர் சொன்னபடியே ஒரு லிங்கத்தை வாங்கி வைத்துக்கொண்டு



சிவபூஜை செய்யத் தொடங்கிவிட்டான்.

வெளியிலே படாடோபமாகப் பூஜை செய்தாலும் சிவ வழிபாட்டை ஆரம்பிக்கும் போதே சந்தேகமும் வந்துவிட்டது! 'பெருமாள், பெருமாள் என்று பூஜை செய்ததெல்லாம் வீணாயிற்று. அப்படி ஒருவர் இல்லவே இல்லை போலிருக்கிறது. இப்போது சிவபூஜை ஆரம்பித்திருக்கிறோம். இதன் கதை என்ன ஆகப் போகிறதோ? சிவன் என்பவரும் இல்லாமல் மறுபடி ஏமாறத்தான் போகிறோமோ?' என்ற ஐயத்துடனே இவனுடைய புதிய ஆராதனை ஆரம்பித்தது.

நம்பிக்கை இல்லாதபோது மனம் எப்படி பூஜாமூர்த்தியிடம் ஈடுபடும்? இம்மாதிரிச் செய்யும் வழிபாட்டுக்குப் பலன்தான் எப்படிக் கிடைக்கும்?

ஓரிரண்டு மாதங்கள் சிவபூஜையில் ஓடியும் இவன் பழைய நிலையிலேயேதான் இருந்தான். மனம் ஈடுபடாமல் வெளியில் ·பூஜைக்குச் செலவு செய்ததால் செலவோடு நின்றதே தவிர, இவன் விரும்பிய வரவு ஏற்படவில்லை.

'சிவபெருமானும் நிச்சயம் இல்லை; அல்லது, அவர் இருந்தாலும் தன் தூப-தீப - நைவேத்தியங்களை ஏற்கவில்லை. இயந்திரம் மாதிரி வெளிப் பார்வைக்குப் பூஜை செய்தான்.

சிவபெருமானிடமும் ராமன் அடியோடு நம்பிக்கை இழந்த சமயத்தில் ஒரு சாக்தரைச் சந்தித்தான். சாக்தர் என்றால் சக்தியான அம்பிகையை வழிபடுபவர். பார்வதி, துர்க்கை, காளி, லலிதை என்று அம்பிகைக்கு உள்ள பல உருவங்களில் இந்த சாக்தர் லலிதையைப் பூஜிக்கும் ஸ்ரீவித்யா உபாஸகர். எனவே அவரும் முன் சொன்ன சைவரின் பாணியிலேயே ராமனிடம் பேசினார்.

''அசடே! விஷ்ணு, சிவன் இவர்களில் யாரைப் பூஜித்துத்தான் பலன் என்ன? பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவருக்கும் மேலே இருந்து, அவர்களையும் ஆட்டி வைப்பவள் லலிதாம்பாவே அல்லவா? ராஜராஜேஸ்வரி என்றே பெயருள்ள அவளைப் பூஜை செய்தால் ஒருவனுக்கு ராஜ பதவிகூட எளிதில் கிடைத்து விடும். நீ அவளை



ஆராதனே செய்து பார். உடனே பலன் அடைவாய்'' என்ருர்.

அவ்வளவுதான்! சிவபூஜையை எப்போது விடலாம் என்று ஆர்வமாக இருந்த ராமன் உடனே அந்த வழிபாட்டை நிறுத்தி விட்டான்.

லலிதாம்பிகையின் விக்கிரஹம் ஒன்றை வாங்கிக் கொண்டு வந்து பூஜை செய்ய ஆரம்பித்து விட்டான்.

உங்களில்கூட அநேகம் பேர் இல்லையா? ஏதாவது கஷ்டம் என்ருல் ''ஸ்வாமி ஸ்வாமி'' என்று என்னிடம் வருகிறீர்கள். ஆனுல் கர்மம் வலுவாக இருந்தாலும், ''ஸ்வாமி''யிடம் நம்பிக்கை போதாவிட்டாலும் உடனே கஷ்டம் போகுமா? போகாது. அவ்வளவுதான்! ''ஸாயிபாபாவே ஒரு மோசம்'' என்று திட்டிவிட்டு இன்னொருவரிடம் போய்விடுவீர்கள். அங்கேயும் இப்படியே ஆகும். பூரண நம்பிக்கை இல்லாவிட்டால் எங்கேயும் விமோசனம் கிடைக்காது. நம்பிக்கை இருந்தாலோ எங்கேயும் ஆண்டவனின் அருள் தோன்றி நலம் அளித்துவிடும்.

ராமன் லலிதாம்மாவுக்கு முதல் நாள் பூஜை ஆரம்பித்தான். முழு நம்பிக்கை இல்லாமலேதான் பூஜை செய்தான்.

அர்ச்சனே முடிந்தது.

அடுத்து தூபம் காட்டினுன்.

சாம்பிராணிப் புகை குபுகுபு என்று அறை முழுவதும் பரவியது.

அந்த அறையில் மாட்டியிருந்த காலண்டர்களில் ஒன்றில் வேங்கடாசலபதியின் படம் போட்டிருந்தது; இன்னொன்றில் பரமேச்வரனின் சித்திரம் வரைந்திருந்தது. சாம்பிராணி தூபம் காற்றில் பரவும்போது இந்த இரு படங்களின் மீதும் புகை பட்டுச் சூழ்ந்து கொண்டது.

அவ்வளவுதான்! வந்ததே கோபம் ராமனுக்கு!

அந்த இரு சித்திரங்களேப் பார்த்து, ''என்னிடம் ஏராளமான பூஜை வாங்கிக்கொண்டு எந்த அநுக்கிரகமும் செய்யாத சாமிமார்களா! இன்னமும் என் பூஜை வந்து உங்களேச் சேரும்படி விடுவேனு? உங்களேப் பூஜை செய்வதை நான் நிறுத்திய பிறகும் தூபத்தில் நீங்கள் பங்கு பெறுவதா?'' என்று ஆத்திரமாகக் கத்தினுன்.

ஒரு துணியை எடுத்து ரிப்பன் போல இரண்டு நீளத் துண்டுகள் கிழித்தான். ஒவ்வொரு நாடாவிலும் அப்படங்களில் ஒவ்வொன்றின் மூக்கையும் இறுகக் கட்டினுன்.

''அப்பாடா!'' என்று திருப்தி கொண்டான். ''இனி என் தூபத்தை நீங்கள் சுவாஸித்து எடுத்துக்கொள்ள முடியுமா, பார்க்கிறேன்!'' என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டான்.

அப்போதே ஓர் அதிசயம் நிகழ்ந்தது!

கட்டிய நாடாக்கள் தெறித்து விழுந்தன!

அவ்விரு படங்களிலிருந்தும் சாக்ஷாத் மஹாவிஷ்ணுவும், மஹேச்வரனுமே குதித்து வந்து ஆவிர்பவித்து விட்டார்கள்! ''என்ன வரம் வேண்டும்?'' என்று ராமனேக் கேட்டார்கள்.

ராமனுக்கே ஒன்றுமே புரியவில்லே. வியப்பிலே பிரமித்துப் போனுன். பிறகு சமாளித்துக் கொண்டு, ''வேங்கடரமணு! பரமேச்வரா! உங்களுக்கு நான் பூஜை செய்த போதெல்லாம் பிரஸன்னமாகி வந்தருளாத நீங்கள், இப்போது பூஜை வஸ்து எதுவும் உங்களேச் சேரக் கூடாது என்று உங்கள் மூக்கையே கட்டி அபசாரம் புரிந்துள்ள போது பிரத்தியக்ஷமாகி யிருப்பது என்ன விந்தை?'' என்று கேட்டான்.

அதற்கு அவர்கள், ''நீ வெளியிலே பெரிதாகப் பூஜை செய்தாலும் அப்போதெல்லாம் நாங்கள் உயிருள்ள சக்தியாக உண்மையிலேயே இருக்கிருேமா, உன் பூஜையை ஏற்கிருேமா, உனக்கு அருள் செய்வோமா என்று சந்தேகப்பட்டுக் கொண்டேதான் இருந்தாய். ஆனுல் இப்போது தூபம் எங்கள் மூக்கில் ஏறக்கூடாது என்று துணி போட்டுக் கட்டியபோது, நாங்கள் வாஸ்தவமாகவே உயிர் கொண்டு வாழ்கிருேம், உன் தூபத்தை மூக்கால் இழுத்து சுவாஸிக்கிருேம் என்ற பூரண நம்பிக்கை உனக்கு இருந்ததல்லவா? அதனுல்தானே மூக்கைக் கட்டினுய்? உயிரில்லாத படம் என்ருல் அப்படிச் செய்திருக்க மாட்டாயே! பூரண நம்பிக்கை எங்கே இருந்தாலும் அங்கே பிரஸன்னமாகி வரம் தருவது எங்கள் தர்மம். ஆகையால் இங்கே எழுந்தருளி விட்டோம். நாங்கள் இருவரும் ஒரே பரமாத்வாவின் இரண்டு ரூபங்கள் தான் என்ருலும், இரண்டிடமும் உன் கோபத்திலேயே முழு நம்பிக்கை காட்டி விட்டதால் இரண்டு உருவத்திலும் வந்திருக்கிருேம்'' என்றனர்.

'இறைவன் நிச்சயம் இருக்கிருன்; நம் வேண்டுதலே யெல்லாம் நிச்சயமாகக் கேட்கிருன்' என்ற முழு நம்பிக்கை அத்தியாவசியம்.

பக்காத் திருடி

'அழகி'



''பத்துமணி ரயிலுக்குநான்
போக வேணு மே–தேடிப்
பார்த்துவிட்டேன் பார்த்துவிட்டேன்
காண வில்லே யே!''
பத்துநிமிஷம் இப்படித்தான்
தேடிப் பார்க்கி றார்–அப்பா
பார்வையிலே பட்டவரை
ஓடிக் கேட்கி றார்.

அடுக்களையில் இருந்துவந்தே
அம்மா நிற்கி றாள்–''குளியல்
அறையினுள்ளே பார்க்கிறேனே!''
என்று போகி றாள்.
படுக்கைவிட்டு எழுந்தஅண்ணன்
''என்ன?'' என்கி றான்–''சாவி
பணமெடுக்க வேணுமடா,
பாரு'' என்கி றார்.

சுற்றிஎங்கும் அலைந்தலைந்து
சோர்ந்து போன பின்–அப்பா
தூளிஉள்ளே தலைஉயர்த்தும்
சுட்டிக் குட்டி யை
உற்றுப்பார்த்து ''டீ! திருடி!''
என்று சிரிக்கி றார்–அவள்
பொக்கைவாயில் தொலைந்தசாவி
பார்த்து எடுக்கி றார்!

பொம்மைக் கல்யாணம்

'மணிவேலன்'

மாமா தந்த பொம்மைக்கும்
மக்குக் கிட்டுப் பொம்மைக்கும்
நாமெல்லாரும் கல்யாணம்
நடுத்தெருவில் செய்வோமா?

சோத்துப் பானைக் கிட்டப்பா!
சுதியை நீயும் கூட்டப்பா!
வாத்து நடை மன்னப்பா
வயிற்றில் தவுலைக் கொட்டப்பா!

கோடி வீட்டுக் குமுதம்மா!
கொண்டு வாடி தட்டத்தை!
மாடி வீட்டு மங்கம்மா!
மடிச்ச பட்டு கொண்டாடி!

பூவு விற்கும் பொன்னம்மா!
பொண்ணுக்கு மாலை எங்கேம்மா?
சீவிச் சடையைப் பின்னேண்டி!
செவந்திப் பூவை வையேண்டி!

மனையில் பொண்ணை அமர்த்தட்டும்
மாப்பிள்ளை பக்கம் குந்தட்டும்!
கெட்டி மேளம் கொட்டட்டும்!
கழுத்தில் தாலி கட்டட்டும்!

ஊர்வலம் இப்போ போகோணும்;
ஒசத்திக் காரு கொண்டாங்க;
பேரைச் சொல்லி வாழ்த்துங்கோ!
பொண்ணும் பிள்ளையும் வாழட்டும்

குடியும் தனியா நடத்தட்டும்;
கொஞ்சிச் சிரிச்சுப் பேசட்டும்!
பிடிச்ச முறையில் வாழட்டும்
பிள்ளை குட்டி ஆகட்டும்!



குட்டிக் கதைகள்

(ஜோபிரே 1770-1848): செய்யுள் வடிவில் குட்டிக் கதைகளை எழுதிய பிரெஞ்சு எழுத்தாளர் இவர்.)

உங்களுக்காகத் தமிழில் தொகுத்தவர்

கு. அழகிரிசாமி

பாம்பும் நரியும்

ஒரு காட்டில் ஒரு பெரிய பாம்பு வசித்து வந்தது. அதைக் கண்டு எல்லாப் பிராணிகளுமே பயந்து நடுங்கும். ஒரு நரி மட்டும் தினமும் காலையில் அந்த நச்சுப் பாம்பைப் பார்த்து, ''மகாராஜா! சௌக்கியமா? அரண்மனையில் நேற்றிரவு நன்றாகத் தூங்கினீர்கள் என்று நம்புகிறேன். மகாராஜாவுக்கு இப்போது நான் செய்ய வேண்டிய பணிவிடை யாது? செய்வதற்குச் சித்தமாக இருக்கிறேன்'' என்றெல்லாம் சொல்லி முகஸ்துதி செய்வது வழக்கம்.

ஒரு நாள் அந்த நரியின் குட்டி இந்த முகஸ்துதியைப் பார்த்து, ''ஏன் நீ இப்படிப் பாம்புக்கு ஸ்துதி பாடுகிறாய்? அது நமக்கு ஜன்ம விரோதியாயிற்றே?'' என்று கேட்டது.

''மகனே! தந்திரத்திலும் சூழ்ச்சியிலும் நம்மோடு போட்டிபோடும் மனிதர்களை நான் பின்பற்றுகிறேன். உதவி செய்பவர்களை விட ஆபத்தான பேர்வழிகளுக்கே மனிதர்கள் அதிகமாக ஸ்துதி பாடுவதை நான் பார்த்திருக்கிறேன்'' என்றது நரி.





ஈசாப்பும் கவிஞரும்

ஒரு நாள் ஈசாப்பை இருபது வயது இளைஞன் ஒருவன் சந்தித்து, ''பேரறிஞரே! நான் பன்னிரண்டு படலங்களோடு கூடிய ஒரு காவியம் இயற்றியிருக்கிறேன். தாங்கள் அதைப் பார்வையிட்டு அபிப்பிராயம் கூறவேண்டும்'' என்று கேட்டான்.

''இளைஞனே! எனக்கு வேலை அதிகம். இப்போது நேரமில்லை. உன் காவியத்தைப் படித்துப் பார்க்க நீ எனக்கு அவகாசம் கொடு. ஒன்றைத் தெரிந்து கொண்ட பிறகுதான் அதைப் பற்றி அபிப்பிராயம் கூற வேண்டும். அத்துடன் பன்னிரண்டு படலங்கள் கொண்ட காவியம் என்பது ஒரு நீண்ட காவியமே ஆகும்'' என்றார் ஈசாப்.

''தாங்கள் சொல்வது உண்மையே. ஆனால் 'தங்களைப் போன்ற ஓர் பேரறிஞர் காவியம் முழுவதையும் படிக்க வேண்டுமா? ஒரு பகுதியைப் படித்துவிட்டே அபிப்பிராயம் கூறிவிட முடியுமே. அதனால் ஏதாவது ஒரு பகுதியைப் படித்துப் பார்த்து அபிப்பிராயம் கூறுங்கள்'' என்று இளைஞன் வற்புறுத்தினான்.

அதற்கு ஈசாப் கூறிய பதில்: ''அந்த விதமாக அபிப்பிராயம் கூறும்படி என்னைக் கேட்டால் நான் மறுப்பதைத் தவிர வேறு வழி இல்லை. அனுபவமும் போதிய பயிற்சியும் இல்லாத ஒரு கொத்தன், ஒரே ஒரு செங்கல்லை மட்டும் பார்த்துவிட்டு, கட்டடம் முழுவதையும் பற்றி அபிப்பிராயம் சொல்லிவிட முடியும் என்று நினைத்தால் எப்படி இருக்கும்? அப்படி நான் செய்ய மாட்டேன்..''

நான்கு நாய்கள்

குளிர் காலத்தில் ஒரு நாள் இரவு மூன்று பெரிய நாய்கள் குளிர் பொறுக்க முடியாமல் சமையல் அறைக்குள் போய், எரிந்து கொண்டிருக்கும் அடுப்பின் அருகில் படுத்துக் குளிர் காய்ந்து கொண்டிருந்தன. அப்படியே அவை தூங்கவும் ஆரம்பித்து விட்டன. அப்பொழுது மற்றொரு நாய் குளிர் பொறுக்க முடியாமல் அங்கே ஒண்டுவதற்கு வந்தது. ஆனால், அந்த மூன்று பெரிய நாய்களும் தன்னை உள்ளே அனுமதிக்காது என்றும், தன்னைக் கண்டால் கடித்துக் குதறி விடும் என்றும் நினைத்த நான்காவது நாய் வெளியே வந்து நின்று கொண்டு பயங்கரமாகக் குரல் எழுப்பிக் குரைத்தது. உள்ளே தூங்கிக் கொண்டிருந்த மூன்று நாய்களும் கண் விழித்து, 'திருடன் வந்து விட்டான்' என்று நினைத்துக் கொண்டு வெளியே ஓடிவந்தன. இருட்டில் திருடனைத் தேடிக் கொண்டு நாலா பக்கமும் குரைத்துக் கொண்டே பாய்ந்து பாய்ந்து ஓடின. அந்தச் சமயம் பார்த்து நான்காவது நாய் உள்ளே புகுந்து, அடுப்படியில் படுத்துச் சுகமாகக் குளிர் காயத் தொடங்கி விட்டது.

மூன்று நாய்களும் இரவெல்லாம் குரைத்துக் கொண்டு திருடனைத் தேடிக் கொண்டிருந்தனவே ஒழியச் சமையற் கட்டுக்குத் திரும்பி வரவேயில்லை.

மனிதனோடு சகவாசம் வைத்துக் கொண்டிருக்கும் எந்தப் பிராணியுமே மனிதனைப் போல் சூழ்ச்சியாகவும், கபடமாகவும் நடக்கும் என்பதில் சந்தேகமே வேண்டாம்.





பல்லியும் முதலையும்

ஒரு காலத்தில் எகிப்தில் உள்ள பிரமீட் கோபுரத்தின் அடிவாரத்தில் வசித்து வந்த ஒரு பல்லி, உலகத்தைச் சுற்றிப் பார்க்கலாம் என்று பயணம் கிளம்பி, நைல் நதிக் கரைக்கு வந்து சேர்ந்தது. ஆற்றங் கரையில் ஒரு பிரம்மாண்டமான முதலை நாணற் புதரில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது.

''இதன் பக்கம் போகலாமா? இதுவும் என் இனத்தைச் சேர்ந்த பிராணி தான். பார்க்கப் போனால் நாங்கள் ஒரே குடும்பந்தான். அத்துடன் இவ்வளவு பெரிய புள்ளியோடு உறவு கொள்ளுவது எனக்குப் பெருமையும் ஆகும்'' என்று சொல்லிக்கொண்டே பல்லி, தூங்கும் முதலையைப் பார்த்து, ''அண்ணா! நம் குலத்தின் தனிப் பெரும் தலைவரே! தம்பி வணங்குகிறேன்'' என்றும், இன்னும் புகழுரையாக எத்தனையோ சொல்லிக் கொண்டும் இருந்தது.

முதலையோ எதையும் காதில் வாங்காமல் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தது.

புகழ் மொழிகளைச் சொல்லிச் சொல்லி அலுத்துப் போன பல்லி, ''அண்ணா நித்திரை செய்கிறார். என் அதிர்ஷ்டம் அவ்வளவுதான். அவரைப் பேட்டி காண முடியாமல் போய்விட்டது'' என்று சொல்லிக் கொண்டே திரும்பிச் சென்றது.


பிரபுக்களான உறவினர்களை மறந்து ஏழைகள் தங்கள் வீட்டோடு இருக்க வேண்டும். பிரபுக்கள் ஆபத்தான பேர்வழிகள். அவர்கள் ஏழை உறவினர்களை மறந்திருக்கும்வரையில் ஏழைகளுக்கு நல்லது.

விளம்பரமும் வியாபாரமும்


ஒரு பொருளை விற்பனை செய்வதற்கு இன்று விளம்பரம் செய்கிறார்கள். விற்பனையை வெற்றியாக்க விளம்பரம் ஓர் அவசியமான அம்சமாகிவிட்டது. விளம்பரக்கலை வளர்வதற்கு முன்பு மனிதன் தான் தயாரிக்கும் பண்டங்களை, விளைபொருள்களை விற்பதற்கு எந்த முறைகளைக் கையாண்டான்? சந்தை என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியும். பல்வேறு இடங்களில் தயாராகும் வெவ்வேறுவிதமான பொருள்களை ஒரே இடத்தில் ஒரு குறிப்பிட்ட நாட்களில் கொண்டு குவித்து வைக்குமிடமே சந்தை. இந்த இடத்தில் இந்த நாளன்று சந்தை கூடும் என்ற நியதியை வகுத்துக் (விளம்பரமாகக்) கொண்டார்கள். சந்தை கூடும் நாட்களில் அங்கே பொருள்களை விற்க, வாங்க மக்கள் வெள்ளமெனக் கூடினார்கள். வியாபாரம் இலகுவாயிற்று. இது இன்றும்கூடக் கிராமப்புறங்களில் செயல்பட்டுவருகிறது. இன்னும் முன்னால் - பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் போவோம். மனிதன் எப்படி விளம்பரப்படுத்தினான்?



1. புராதன எகிப்தியர்களிடையே விளம்பரம் செய்யும் முறை இருந்தது. ஒரு எகிப்தியன் வழியில் ஒரு விலைமதிப்புள்ள ஆபரணம் ஒன்றைக் கண்டெடுக்கிறான். அவன் நாணயமுள்ளவன். தனக்குக் கிடைத்த அப்பொருளை அதன் உரிமையாளரிடம் சேர்ப்பிக்க நினைக்கிறான். ஆகவே அங்காடியில் விளம்பரங்களை எழுதும் ஒருவனிடம் தான் கண்டெடுத்த பொருளைக் காட்டி ஒரு நோட்டீஸ் எழுதிக் கொடுக்கும்படி கேட்கிறான். அந்தக்காலத்து விளம்பர நோட்டீஸ் கையாலேயே எழுதப்பட்டது.




2. கல்வியறிவில் முன்னேற்றம் கண்டான் மனிதன். எழுதப் படிக்கத் தெரியும். இந்த நிலையில் ஒரு தொழிலாளி தான் எந்த விதமான கலையில் வல்லவன் என்பதைத் தெரிவிக்கத் தன் கடை வாசலில் அந்தத் தொழிலின் சின்னமாக எதையாவது ஒன்றைத் தொங்க விடுவது வழக்கமாகியது. படத்தில் சக்கரம் செப்பனிடும் ஒரு தொழிலாளி தன் கடை முன் ஒரு சக்கரத்தையும், எதிர்க் கடைக்காரர் — அவர் ஒரு ஒயின் தயாரிப்பாளர் — திராட்சைக் குலையையும் போவோர் வருவோர் கவனத்தைக் கவரும்படி தொங்க விட்டிருக்கிறார்கள்.



3. இன்று வைத்தியரின் (டாக்டர்) வீட்டு வாசலில் போர்டு இருக்கிறது. சிகை அலங்கரிப்போரின் கடை வாசலில் அதற்குரிய விளம்பரப் பலகை இருக்கிறது. ஆதியில் நாவிதரே வைத்தியராகவும் இருந்தார். அவர் கடை முன் ஒரு கம்பம் நடப்பட்டிருக்கும். அதில் சிகப்பும் வெளுப்புமாக அடுத்தடுத்து வர்ணம் தீட்டப்பட்டிருக்கும். இது அவர் ஓர் அறுவை சிகிச்சை தெரிந்த நாவிதர் என்பதைத் தெரிவிப்பதற்கான விளம்பரமாகும்.



4. இன்று விளம்பரப் பலகைகளில் வார்த்தைகளும் வாசகங்களும் இடம் பெறுவதைக் காண்கிறோம். ஆனால் ஒரு நிலையில் விளம்பரப் பலகைகளில் வார்த்தைகளே இடம் பெறவில்லை. அந்த அந்தத் தொழிலுக்கோ, வியாபாரங்களுக்கோ உரிய அடையாளங்களே விளம்பரப் பலகைகளில் இடம் பெற்றது. இதனாலேயே இவற்றுக்கு 'சைன் போர்டு' என்ற பெயர் ஏற்பட்டதோ? படத்தில் ஒரு கடை வீதி. அங்கு வித விதமான சின்னங்களைத் தாங்கிய போர்டுகள் தொங்கவிடப்பட்டுள்ளன. கம்பளி வியாபாரி (செம்மறியாடு) புத்தக பைண்டர், சாவி தயாரிப்போர், இப்படிப் பல.



5. அச்சுக் கலை வளர்ச்சிக்குப் பிறகே விளம்பரக் கலையின் வளர்ச்சியும் ஆரம்பமாயிற்று. அச்சடிக்கப்பட்ட முதல் விளம்பரம் 1477ல் வில்லியம் காக்ஸ்டன் என்பவரால் செய்யப்பட்டது. மத சம்மந்தமான காரியத்துக்காக இந்த விளம்பரந் தான் அச்சிடப்பட்டது. பிரார்த்தனைப் புத்தகத்தைப் போல இந்த அறிவிப்பு அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது.




6. நாற்சந்தியில் நின்று நகரா ஒலிக்கச் செய்து கூட்டத்தைக் கூட்டிச் செய்தியை அறிவிப்பதும் ஒரு வகையான விளம்பரம். ''இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்'' — இப்படி முழக்குவான் அரசாங்க ஊழியன். மேலை நாடுகளில் கையில் மணி ஏந்தி இந்த அறிவிப்பாளன் வருவான். சமீபத்தில் நடக்கவிருக்கும் முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றிப் பொதுமக்களுக்கு அறிவிக்க மணியை ஒலிப்பான். மக்கள் கூடுவார்கள். செய்தியைப் பிரகடனம் செய்வான். இங்கிலாந்தின் தெருவில் இத்தகைய காட்சி ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள்.



7. பத்திரிகைகளில் விளம்பரங்கள் தோன்றியது 1657ல்தான். 'பப்ளிக் இன்டலிஜென்ஸர்' என்ற வாரப் பத்திரிகையில்தான் முதன் முதலில் விளம்பரங்கள் வெளியிட்டார்கள். எத்தகைய விளம்பரங்கள்? கப்பல்கள் கிளம்பும், வந்து சேரும் செய்திகள், நோய்களைக் குணப்படுத்தும் மருந்துகளைப் பற்றி, தலையலங்காரம் செய்வோரின் நிகழ்ச்சிகள் ஆகியவை இந்த 16 பக்க வாரப் பத்திரிகையில் இடம்பெற்ற விளம்பரங்களாகும்.



8. பொருள்களைத் தலையில் சுமந்து கூவி விற்பது ஒருவகை விளம்பரம்தானே? நம் நாட்டில் மட்டுமே இத்தகைய கூடைக்காரிகள் இருப்பதாக நினைக்க வேண்டாம். லண்டனிலும் பழக் கூடைக்காரி உண்டு. முட்டை, கோழிகள், பூக்கள், கறிகாய்கள் இவைகளைத் தலையில் சுமந்து கூவி விற்கும் கூடைக்காரிகளும், கைவண்டிகளைத் தள்ளிக் கொண்டு குடை, செருப்பு, பண்டம் பாத்திரம் ரிப்பேர் செய்வோரும் சர்வ சாதாரணம்.



9. விக்டோரியா ராணியின் காலத்தில்தான் விளம்பரத் தட்டிகளை ஏந்தி பவனி வரும் பழக்கம் ஆரம்பமாயிற்று. உடலில் முன்னும் பின்னும் விளம்பரத் தட்டிகளைத் தோளில் மாட்டிக் கொண்டு தெருத் தெருவாகப் போவது, 'ஸைன் போர்டு'களைக் கையிலேந்தியபடி ஊர்வலமாகச் செல்வது ஆகியவையெல்லாம் விக்டோரியன் காலத்தில் ரொம்பப் பிரபலமடைந்த விளம்பர உத்திகளாகும்.

இன்று விளம்பர முறை எப்படியெல்லாம் வளர்ந்து வேரூன்றிக் கிளை விட்டுத் தழைத்துள்ளது என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே!

— கிருஷ்ணவேணி

ஜோஸ்யம் பொய்க்காது

ஸ்ரீரங்கம் கே.எஸ். ஸ்ரீனிவாசன்

குப்தர்களின் காலம் சரித்திரத்தில் பொற்காலம் என்பது உங்கள் அனைவருக்கும் தெரிந்த விஷயம். குப்தப் பேரரசைப் பல மன்னர்கள் ஆட்சி செய்த போதிலும் இரண்டாம் சந்திர குப்தர் காலத்தில்தான் குப்தப் பேரரசு எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கியது. இரண்டாம் சந்திர குப்தர் காலத்தில்தான் இவரது சபையில் ஒன்பது புலவர்கள் சபையை அலங்கரித்தார்கள். இரண்டாம் சந்திர குப்தர் காலத்தில்தான் ஜோசியம் என்ற சொல்லே ஏற்பட்டது.

ஒரு சமயம் என்றும் இல்லாமல் சபை நிரம்பி இருந்தது. உயர்ந்த சிம்மாசனத்தில் சந்திரகுப்தர் அமர்ந்திருக்க அவருக்கு இருபுறமும் பணிப் பெண்கள் விசிறிக் கொண்டிருந்தார்கள். அரசனின் இருபக்கத்திலும் மந்திரிகள், சான்றோர்கள் பல நாட்டு மன்னர்கள், ஜோதிட வல்லுனர்கள் அமர்ந்திருந்தனர். எங்கும் அமைதி நிலவியது. அரசன் முதன் முதலாக தன் வாயைத் திறந்தான். தன் எதிரே அமர்ந்திருக்கும் ஆரியபட்டரைப் பார்த்து "பட்டரே! எனக்கு நீண்ட நாட்களாக மனசு சரியாகவேயில்லை. ஏதோவொன்று என்னை வாட்டிக் கொண்டேயிருக்கிறது. என் ஜாதகத்தைத் தாங்கள் பார்த்து என்ன குறை என்று கூற முடியுமா!" என்றான்.

பட்டர், "பார்த்தால் போயிற்று" என்றார். உடனே ஒரு பணியாள் மன்னனின் ஜாதகத்தைக் கொண்டு வந்து பட்டரின் திருவடிகளில் வைத்து விட்டுச் சென்றான். பட்டர் சில நிமிட நேரம் அதைப் பார்த்து விட்டுப் பின்னர் மன்னரின் முகத்தைப் பார்த்தார். அவரை அறியாமல் அவரது முகத்தில் புன்முறுவல் பூத்தது.

"என்ன பட்டரே, தாங்களே சிரித்துக் கொள்கிறீர்கள்? நானும் அதில் பங்கு கொள்ளலாம் என்று நினைக்கிறேன். விஷயத்தைச் சொல்லி விட்டுச் சிரியுங்கள்" என்றான்.

"ஒன்றும் இல்லை, மன்னா! தங்கள் ஜாதகத்தைப் பார்த்தவுடன் தங்கள் ஜாதகம் தானா என்ற ஐயம் எனக்குத் தோன்றியது. அதனால்தான் சிரித்தேன். தங்களுக்கு இப்போது சுக்ர தசை நடக்கிறது. சுக்ரன் எட்டாம் இடத்தில் உள்ள குருவைப் பார்க்கிறான். இது ரொம்ப விசேஷம். நீங்கள் நீண்ட காலமாக நினைத்து வரும் காரியம் இன்னும் பதினெட்டு நாட்களில் ஜெயமாகும். பெரிய கொள்ளைக் கூட்டம் உங்களைக் கண்டு சிதறி ஓடும். இதை நான் உங்களுக்கு வேணுமென்று சொல்லவில்லை. ஜாதகம் சொல்கிறது" என்றார் பட்டர்.

சந்திரகுப்தன் பட்டரைப் பார்த்து "வாஸ்தவம்தான் பட்டரே! நாட்டைக் குட்டிச்சுவராக்கும் சாகர்களை ஒடுக்க வேண்டும் என நினைத்தேன். அது இப்போதுதான் கைகூடும் போல் எனக்குத் தெரிகிறது. அது மட்டும் நீங்கள் சொல்லியபடி நடந்து விட்டால் இரு நூறு கிராமங்களை மான்யமாகத் தங்களுக்குத் தருகிறேன். இது சத்தியம்" என்றான்.

நாட்டின் கிழக்கே உள்ள ஒரு பாழ் மண்டபத்தில் இரண்டு பேர் ஆடு, புலி ஆட்டம் ஆடிக் கொண்டிருந்தார்கள். வழிப்போக்கர்கள் இளைப்பாறுவதற்குக் கட்டிய மண்டபம் அது. மண்டபத்தை ஒட்டினாற்போல உள்ள பெரிய பாறாங்கல்லின் மீது ஒரு முனிவர் அமர்ந்து இருந்தார். கண்ணை மூடிக் கொண்டு நிஷ்டையில் அமர்ந்திருந்த அவர் திடீரெனச் சிரிக்க ஆரம்பித்தார். ஆட்டத்தில் இருந்த அவ்விருவரும் அவர் அருகே வந்து "ஏஞ்சாமி சிரிக்கிறே! மறை, கிறை கழண்டு போச்சா! வெயில் காலம் கூட ஆரம்பிக்கலையே" என்றார்கள்.

"ஒன்றும் இல்லை அப்பா! விதி எவ்வளவு வலியது பார்த்தாயோ?" அவர் வார்த்தையை முடிக்கும் முன்னர் ஒருவன் எரிச்சலுடன் "சீக்கிரம் சொல்லிவிட்டுச் சிரி சாமி. எங்களுக்கு ஆட்டம் முக்கியம்" என்றான்.

"சொல்கிறேன் கேளுங்கள் என் ஞானக் கண் கொண்டு பார்க்கிறேன். நான் அமர்ந்திருக்கும் இப்பாறையின் அடியில் கருநாகம் ஒன்று இரை தின்று விட்டுப் படுத்திருக்கிறது. இந்தக் கருநாகத்தால் ஒருவன் மரணம் அடைவான். இந்த நாடு சுபிட்சம் அடைய நேரிடும். எல்லாம் அவன் செயல். அவனன்றி ஓர் அணுவும் அசையாது. முருகா!" என்று சொல்லி

விட்டு அந்தப் பாறையை விட்டு எழுந்து போய் விட்டார் முனிவர்.

முனிவர் போன பின்பு அவ்விருவரும் ஒருவன் முகத்தை ஒருவன் பார்த்துக் கொண்டார்கள். மீசையுடன் இருப்பவன் மற்றவனைப் பார்த்து ''இந்தப் பாறையைப் புரட்டி அந்தப் பாம்பை கொன்று விட்டால் இதனால் மரணம் அடைபவனைச் சாவிலிருந்து விடுவிக்கலாம். அவனும் நமக்குக் கை நிறையக் காசு தருவான். அதைக் கொண்டு சீட்டு ஆடலாம். எப்படி என் யோசனை?'' என்றான்.

“சரியான யோசனைதான் மாப்ளே!'' என்றான் அவனுடன் ஆடியவன் குஷியுடன்.

இருவரும் சேர்ந்து அந்தப் பாறையைப் புரட்டிக் கருநாகத்தை கொன்றார்கள். பிறகு இருவரும் அங்கு வருபவனை எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள்.

எதிரே தூசிப் படலம் வெகு தெளிவாகத் தெரிந்தது. தூசிப் படலம் மறைய அங்கே சாகாரி தன் குதிரை மீது அமர்ந்து வீரர்களுடன் சந்திரகுப்தனுடன் போரிட விரைந்து வந்து கொண்டிருந்தான். கைகாட்டி இருவரும் சாகாரியை நிறுத்தி நடந்த விஷயத்தைக் கூறி இறந்த பாம்பையும் காட்டிப் பவுன் தாருங்கள் என்றான் ஒருவன். குதிரையில் அமர்ந்தவாறே சாகாரி, ''பவுனா வேண்டும். இதோ வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று கூறி சாட்டையை உருவினானோ இல்லையோ, தப்பித்தோம் பிழைத்தோம் என இருவரும் திரும்பிப் பார்க்காமலேயே ஓடினார்கள் பிறகு சாகாரி தன் கூட்டத்தாரைப் பார்த்து ''இந்தப் பாம்பு என்னைக் கொல்லப் பார்த்ததாம். நல்ல வேடிக்கைத்தான்'' என பெரிதாகச் சிரித்தான். அவனுடன் வந்தவர்களும் சிரிக்கப் பின்னர் சாகாரி குதிரையிலிருந்து இறங்கித் தன் காலால் அதை மிதித்தான். திடீரென அவன் அலற ''என்ன! என்ன?'' எனப் பதறி விட்டார்கள் அவனது வீரர்கள். காலில் இறந்த பாம்பின் பல் குத்தி விஷம் தலைக்கேறி விட்டது சாகாரிக்கு. கண்கள் இரண்டும் சொருகி உடம்பு நீலமாகிப் பொத்தென்று கீழே மரம் போலச் சாய்ந்து பிணமானான் சாகாரி. இதனை மறைவில் நின்று பார்த்துக் கொண்டிருந்த சந்திரகுப்தனின் ஒற்றன் ஒருவன் விரைவாகப் போய்ச் செய்தி சொல்ல சந்திரகுப்தன் உடனே, படையுடன் அவ்விடத்திற்கு வந்தானோ இல்லையோ சாகாரியின் படைகள் புறமுதுகிட்டு ஓடின. சாகாரியின் படைகளை விரட்டிப் பிடித்து அனைவரையும் கழுவில் ஏற்றினான் சந்திரகுப்தன். பின்னர் அரண்மனைக்கு திரும்பி வந்து தன் ஜாதகத்தைச் சரியாகக் கணித்துச் சொன்ன ஆரியபட்டரை நான்கு குதிரைகள் பூட்டிய தேரில் அமர்த்தி சால்வைப் போர்த்தி தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றி அவரைப் பெருமைப் படுத்தினான் சந்திரகுப்தன்.



மர்ம மாளிகையில் பலே பாலு—11

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்




சின்ன எஜமானர்களே! நீங்கள் கூறுவது நிஜமாகத்தானா?
ஆமாம் மகேஷ்பாபு. நாங்கள் இங்கிருந்து எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் கிளம்பி விடுகிறோம்.
மகேஷ்பாபுவின் முகம் மலர்ந்தது.
உங்கள் முதல் முடிவைச் செயல் படுத்துவதைக் கைவிடுவதானால் நீங்கள் அவசரப்பட்டுக்கொண்டு திரும்ப வேண்டாம். இதோ இந்த ரகசியச் சுரங்கத்திலிருந்து வெளியேற வேறொரு வழி.
ஒரு சிறிய கதவு வழியே அவர்கள் வெளியேறிய போது அங்கே...
என்ன அற்புதமான காட்சி...! கனவா...?
இந்தத் தீவு வாசிகளில் வேறு சிலரும் உங்களைச் சந்திக்க விரும்புகிறார்கள்.
இது... இந்தக் கரடி... அதோ அந்தக் கழுகு இவையெல்லாம் எங்களைப் பீதியினால் கதிகலங்க வைத்தவைகளல்லவா?
சின்ன எஜமானரே, இந்த மிருகங்கள் உங்களை பீதியடையச் செய்யவில்லை. இத்தனையும் செய்தது நான் தான். இந்த விலங்குகளும் பறவைகளும் என் தோழர்கள். உங்கள் திட்டம் தவறானது என்பதை உங்களுக்கு உணர்த்துவதற்கு எனக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன் இவைகளிடம். இவைகளுடைய சரணாலயமாக விளங்குகிறது இந்தத்தீவு. உங்கள் முடிவை மாற்ற முடிந்தது என்றால்.
எங்களுக்கு ஏற்பட்ட அபாயகரமான ஆபத்துக்களுக்கெல்லாம் பின்னாலிருந்தவர் நீங்கள் தானா?
உண்மையில் அவை எதுவுமே ஆபத்துக்களல்ல. எங்கள் தற்காப்புக்காக உங்களை பீதி கொள்ளச் செய்து உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ளும் படிச் செய்வதற்குத் திட்டமிட்டு நடத்தப்பட்ட நாடகம்.
பாபுவையும் ரவியையும் தோழர்களாக எண்ணிச் சூழ்ந்து கொண்டன எல்லா மிருகங்களும்.
மகேஷ்பாபு! இவை இங்கிருந்து எங்களைப் போக அனுமதிக்காது போலிருக்கிறதே. இந்தத் தீவு ஒரு சொர்க்கலோகம் என்ற உணர்வு எங்களுக்கு இப்போதுதான் ஏற்படுகிறது.
உங்கள் இருவரையும் தங்களவர்களாக-இந்தத் தீவு வாசிகளாக தங்கள் பாதுகாவலர்களாக இவைகளும் இப்போது நினைக்கின்றன.
முற்றும்
அடுத்த இதழில் பார்க்கவும்.)

அரபு நாட்டில் பாஸ்ரா என்று ஒரு நகரம். அதில் ஹாஸன் என்ற வாலிபன் வாழ்ந்து வந்தான். அவன் பொற் கொல்லன். ஒருநாள் பாரசீக தேசத்தைச் சேர்ந்த ஒரு கிழவன் வந்தான். சுலபமாகத் தங்கம் செய்யும் வித்தை தனக்குத் தெரியும் என்று கூறி அதேபோல, ஒரு தாமிரத் துண்டைத் தங்கமாக்கிக் காட்டினான். தங்கம் செய்யும் ரகசியத்தைக் கிழவனிடமிருந்து கற்றுக் கொள்ளத் துடித்தான் ஹாஸன்.

பாரசீகக் கிழவனோடு பயணப்பட்டுப் போனான். அப்போதுதான் அந்தக் கிழவன் எவ்வளவு கொடியவன் என்பது தெரிந்தது. இனித் தப்ப முடியாது என்ற நிலையில் கிழவன் சொன்னபடியெல்லாம் கேட்க வேண்டிய சூழலில் - ஒட்டகப் பிரயாணம், பாலைவனத்தின் பயங்கரம். முடிவில் நெடிதுயர்ந்த மலையுச்சிக்கு அண்டரெண்ட பட்சிகளால் தூக்கிச் செல்லப் படுகிறான் ஹாஸன். அங்கிருந்து தாமிரத்தைத் தங்கமாக்கும் மூலிகையைக் கீழேயுள்ள பாரசீகக் கிழவனிடம் கட்டிப் போடுகிறான். கொலைகாரக் கிழவன் ஹாஸனை மலையுச்சியிலேயே தவிக்கவிட்டுப் பச்சிலைகளுடன் ஒட்டகத்தில் பறந்தோடிப் போய்விடுகிறான்.

அண்டரெண்ட பட்சிகளிடமிருந்து தப்பிப் பிழைக்கக் கடலில் குதிக்கிறான் ஹாஸன். கடல் அலைகள் அவனை ஒரு தீவில் கொண்டு சேர்க்கிறது. பாலைவனத் தீவில் ஓர் அற்புதமான அரண்மனை. அதில் ஏழு அழகிகள் —சகோதரிகள்— வசிக்கிறார்கள். அவர்களால் காப்பாற்றப்பட்டு அவர்களின் சகோதரனாகச் சில காலம் வாழ்கிறான் ஹாஸன். ஏழு சகோதரிகளும் ஹாஸனை ஒரே ஒரு அறையை மட்டும் திறக்க வேண்டாம் என்று கூறுகிறார்கள்.

ஒன்றைச் செய்யக் கூடாது என்று தடை விதிக்கும் போதுதான் அதைச் செய்யும் ஆவல் அதிகமாகும். ஹாஸன், சகோதரிகள் எச்சரித்துச் சென்றதைப் புறக்கணித்து அந்த அறையைத் திறக்கிறான். அதன் ரகசியத்தைக் கண்டு திகைக்கிறான். அன்னப் பறவை அழகியைக் கண்டு மயங்கிப் பித்தனாகிறான். அன்னப் பறவை அழகி: பூதங்களுக்கெல்லாம் அரசனான பெரும் பூதத்தின் ஏழு பெண்களில் கடைசிப் பெண் அவள்.

அவளை எப்படி அடைவது என்ற வழியை ஹாஸனுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். சகோதரிகள். மிகுந்த பிரயாசையின் பேரில் ஹாஸன் அன்னத்தூவி அழகியை மணந்து கொண்டு அவளோடு தன் ஊருக்குத் திரும்புகிறான்.

இதுவரை இந்தக் கதையைப் பழைய கோகுலம் இதழ்களில் படித்திருப்பீர்களே? ஞாபகம் வருகிறதா? பழைய இதழ்களைப் புரட்டிப் பாருங்கள்.

வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் கலந்து தானே வரும். இப்படி இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்த ஹாஸனுக்கு என்ன துன்பம் நேர்கிறது என்பதை இனிமேலே படியுங்கள்.

★

அன்னப் பறவை அழகியுடன் ஹாஸன் ஆனந்தமாக வாழ்க்கை நடத்தி வந்தான். மூன்றாண்டுகள் கழிந்தன. பாலைவனத்தின் எல்லையிலேயுள்ள எழில் மாளிகையில் வாழும் ஏழு சகோதரிகளின் நினைவு ஒரு நாள் ஹாஸனுக்கு வந்தது. வருஷத்துக்கு ஒரு முறை தான் அவர்களைக் காண வருவதாக வாக்களித்திருந்தான். அந்த வாக்குத் தவறி விட்டோமே என்று வேதனைப்பட்டான். மூன்றாண்டுகளாக அன்புச் சகோதரிகளைக் காணப் போகவில்லையே!

சகோதரிகளைக் காண்பதற்குக் கிளம்பிப்போக ஏற்பாடு செய்தான் ஹாஸன். அவர்களுக்குப் பரிசளிக்க பல விநோதமான, அபூர்வமான கலைப் பொருள்களையும், பழங்களையும் நகைகளையும் சேகரித்துக் கொண்டான். பிறகு தன் தாயாரைத் தனியே அழைத்துப் போனான். ''அம்மா நான் மணம் செய்துக் கொண்டுள்ள பெண், பூதங்களுக்கெல்லாம் தலைவனான அரச பூதத்தின் அருமை மகள். அவள்





வானத்திலே பறக்கும் வல்லமை பெற்றவள். அவளுக்கு இவ்வல்லமையைத் தருவது அன்னப் பறவையின் சிறகுகளினாலான ஓர் அங்கி. இதோ இந்தத் தங்கப் பேழைக்குள் அந்த அதிசய அங்கியைப் பத்திரமாக வைத்திருக்கிறேன். இதை அபகரித்துத்தான் நான் அந்த அழகியை அடைந்தேன். இது மறுபடி அவள் கண்களில் பட்டு விடக் கூடாது. இதைப் பார்த்தாளானால் அதை அணிந்து கொண்டு வானத்திலே பறந்து செல்ல வேண்டுமென்ற அடக்க முடியாத ஆசை வந்து விடும் அவளுக்கு. அப்படி அவள் பறந்து சென்றாளானால் நான் அவளை இழந்து விடுவேன். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது. ஆகவே உன் மகன் உயிரோடு சந்தோஷமாக இருக்க வேண்டுமானால் இந்தத் தங்கப் பேழையையும் இதிலுள்ள அன்னத் தூவி அங்கியையும் அவள் கண்களில் காட்டாதே. நான் திரும்பி வரும் வரையில் எனக்காக, இதைக் காப்பாற்றிப் பாதுகாத்து வா'' என்றான். அவன் தாயும் அப்படியே செய்வதாக வாக்களித்தாள்.

மனைவி, தாயார், அருமைக்குழந்தைகளிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினான் ஹாஸன். நகருக்கு வெளியே போய் மந்திரத் தம்பட்டத்தை முழக்கினான். ஒட்டகங்கள் தோன்றி ஓடி வந்தன. அதில் ஏறிக் கொண்டு தன் சகோதரிகளைக் காணப் பிரயாணப்பட்டுப் போனான்.

கணவனைப் பிரிந்து மூன்று நாட்கள் வரை அன்னப் பறவை அழகி அமைதியாக, ஆனந்தமாகவே இருந்தாள். அதன் பிறகு அவளுக்கு அந்த வீடும் தோட்டமும் நீரூற்றும் அலுப்பைத் தந்தன. ஹாஸன் இல்லாததினால் தனிமை அவளுக்குத் தாங்கவொண்ணாத வேதனையை அளித்தது.

''அம்மா, நாம் இன்று குளிக்க நதிக் கரைக்குப் போகலாம். நாலு புது முகங்களைக் கண்டாலாவது மனத்துக்கு உற்சாகம் ஏற்படும்'' என்று கேட்டுக் கொண்டாள். முதலில் ஹாஸனின் தாயார் அதற்கு இணங்கவில்லை. ஆனால் தினம் தினம் அவள் நச்சரித்தும் மாமியாரைப் புகழ்ந்தும் மெள்ள மெள்ள அவள் மனத்தை மாற்றி விட்டாள். மருமகளை அழைத்துக் கொண்டு நதிக்குக் குளிக்கச் சென்றாள் ஹாஸனின் தாயார். நதிக்கரையிலே அன்னத்தூவி அழகி தன் முகத்திரையை விலக்கினாள் குளிப்பதற்காக. அவளது அற்புத எழிலைக் கண்டனர் ஆற்றங்கரையில் இருந்த அத்தனை பெண்களும். பிரமிப்படைந்தனர். இப்படி ஓர் அழகியைப் படைத்ததற்காக ஆண்டவனுக்கு வணக்கம் செலுத்தினர்.

இப்படி மயங்கிய பெண்களில் மன்னர் ஹாரூன் அல் ரஷீதின் அரண்மனைப் பணிப்பெண் ஒருத்தி இருந்தாள். வியப்புத் தணியாதவளாக அவள், ராணி சுபைதாவிடம் போய், ''மகாராணியவர்களே! மங்கையரில் இப்படியொரு அழகை நான் கண்டதேயில்லை'' என்று ஹாஸனின் மனைவியைப் பற்றிக்

கூறினாள். மகாராணிக்கு அத்தகைய ரூபவதியைத் தானும் காண வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. உடனே வீரர்களை அனுப்பி ஹாஸனின் தாயாரையும் மனைவியையும் அரண்மனைக்கு அழைத்து வருமாறு கட்டளையிட்டாள்.

வீரர்கள் வந்து அழைத்ததும் ஹாஸனின் தாயார் நடுநடுங்கிப் போனாள். என்ன விபரீதம் ஏற்படப் போகிறதோ என்று தவித்தாள். அரண்மனையின் ஆணையை அலட்சியப்படுத்த முடியாதே. அன்னப் பறவை அழகியையும் அழைத்துக் கொண்டு வீரர்களுடன் அரண்மனைக்குக் கிளம்பினாள். ரகசிய வாயில் வழியே அவ்விருவரையும் அந்தப்புரத்துக்குள் அழைத்துப் போய், ராணி சுபைதாவின் முன்னிலையில் நிறுத்தினார்கள். அன்னத்தூவி அழகி தன் முகத்திரையை விலக்கினாள். அவள் அழகின் ஜ்வலிப்பினால் அந்தப்புரமே பிரகாசமடைந்தது.

''கொள்ளை அழகை உனக்குக் கொடுத்ததற்காக அல்லாஹ்வை வணங்குவாயாக. காண்பவர்களின் கண்களுக்கு விருந்தாக இருக்கிறது உன் கட்டழகு'' என்று பாராட்டினாள் மகாராணி.

அப்போது அன்னத்தூவி அழகி, ''போற்றுதலுக்குரிய மகாராணியவர்களே! என்னிடம் ஓர் அபூர்வமான ஆடை இருந்தது. அதை நான் அணிந்து கொண்டேனானால் இதையும் விட அழகாக இருப்பேன்'' என்றாள்.

''அப்படியா? உடனே போய் அந்த அபூர்வ ஆடையை எடுத்து வரச்சொல். எங்களை மகிழ்விப்பதற்காக அதை அணிந்து காட்டு'' என்றாள் மகாராணி.

''அந்த அற்புத ஆடை இப்போது என்னிடமில்லை. என் கணவனிடமோ அல்லது அவருடைய தாயாரிடமோ தானிருக்கிறது'' என்றாள் அன்னப் பறவை அழகி.

மகாராணி சுபைதா ஹாஸனின் தாயாரிடம் அந்த ஆடையைக் கொண்டு வருமாறு கெஞ்சினாள். மன்றாடிக் கேட்டுக் கொண்டாள். ஆனால் அந்த முதியவள் எதற்கும் மசியவில்லை. பாரசீக மன்னரின் பொக்கிஷம் முழுமைக்கும் ஈடாகும்படியான ஒரு நவரத்தின மாலையைக் கொடுத்து அந்த ஆடையைக்கொண்டு வருமாறு வேண்டிக் கொண்டாள். ஆனாலும் பயனில்லை. முடிவில் பலாத்காரமாகக் கிழவியிடமிருந்து தங்கப் பெட்டியின் சாவியைப் பறித்துக் கொண்டு போய், ஹாஸனின் வீட்டிலிருந்த பேழையைக் கொண்டு வந்தார்கள். ஹாஸனின் தாயார் 'என்ன விபரீதம் நிகழப் போகிறதோ' என்று கண்ணீர் ஒழுக இடிந்து போய் அமர்ந்திருந்தாள்.

தங்கப் பேழையிலிருந்து அன்னத் தூவியினாலான ஆடையை எடுத்து அழகியிடம் கொடுத்தாள் மகாராணி. மட்டில்லா மகிழ்ச்சியுடன் அதை வாங்கி அணிந்து கொண்ட அவள், வெண் மேகத்தைப் போல விண்ணிலே எழும்பி உத்தியான வனத்தின் மேலாகப் பறந்தாள். அந்தப்புரத்துப் பெண்களெல்லாம் வியப்பினால் வாய் விட்டுக் கத்தினார்கள். பறவையைப் போல் ஒரு பெண் பறக்கிறாள்; அவள் உடுத்தியிருந்த இறகு ஆடை பளபளத்து ஜ்வலிக்கிறது — இது போதாதா, அவர்கள் பிரமிப்படைவதற்கு?

அன்னத்தூவி அழகி சூரியனின் கதகதப்பினாலும் மென் காற்று, வெளேர் இறகுகளினூடே புகுந்து விளையாடி ஓடும் கிளுகிளுப்பினாலும் ஆனந்த வெறி கொண்டாள். இன்னும் மேலே மேலே பறந்து பறந்து பாலைவனத்தின் மேலாக, நீலக் கடல் மீதாகப் பறந்து போய், தன் வீட்டையும் தன் மனிதர்களையும் காண வேண்டும் என்ற துடிப்பு மிக்கவளானாள் அந்த அழகி. தாழ்வாகப் பறந்து கொண்டிருந்தவள் வட்டமடித்து 'விர்ரென்று' மேலே கிளம்பினாள். கூசச் செய்யும் சூரிய ஒளியைத் தடுக்கக் கண்களுக்கு மேலாக கைகளை வைத்துக் கொண்டு அண்ணாந்து பார்த்து அதிசயித்துப் போனாள் மகாராணி. ''அற்புதம்; அற்புதம்! போதும் திரும்பிவிடு. மங்கையருள் மகத்தான அழகியே, இறங்கி வா''! என்று அழைத்தாள்.

''இறங்கி வருவதா? இனிமேலா? அது இயலாத காரியம்!'' என்று கூறி இன்னும் மேலே பறக்கலானாள். அப்போது ஹாஸனின் தாயார் அழுது கொண்டு நிற்பது அவள் பார்வையில் பட்டது. அவள் மனம் வேதனையடைந்தது. ஏனென்றால் அவள் மாமியார் அவளைப் பாசமுடன் நேசித்தாள்.

''அம்மா!'' என்று அழைத்தாள் அன்னப்பறவை அழகி. ''உங்களைப் பிரிந்துசெல்வது எனக்கும் வேதனையாகத்தான் இருக்கிறது. என் கணவர் வந்ததும் என்னைக் காணாமல் பரிதவிப்பார். அவரை 'வாக் வாக்' தீவுக்கு வரச் சொல்லுங்கள்'' என்று கூறிவிட்டு அகன்ற தன் சிறகுகளை அடித்து 'ஜிவ்' வென்று மேலே கிளம்பிப் பறந்து மறைந்தே போனாள்.

சகோதரிகளுடன் மூன்று மாதங்கள் தங்கினான் ஹாஸன். மகிழ்ச்சி நிறைந்த

நாட்களாகக் கழிந்தன அவை. பிறகு பாக்தாத் நகருக்குத் திரும்பினான்.

வீட்டினுள் நுழைந்ததுமே அது வெறிச்சோடிக் கிடப்பதையும் அழகு மனைவியையும் குழந்தைகளையும் காணாததையும், அழுது வீங்கிய முகத்துடன் தாயார் துரும்பாக இளைத்துக் கிடப்பதையும் கண்ட ஹாஸன் இந்த நிலைக்குக் காரணத்தைக் கேட்டான். தாயார் அவனிடம் நடந்தவைகளை விவரித்தாள். கேட்ட அவன் இடிந்து போய்ப் பல மணி நேரங்கள் பேச்சற்ற நிலையில் மயங்கிக் கிடந்தான். பிறகு திடீரென்று ஆவேசம் வந்தவன்போல் தன் ஒட்டகத்தின் மேல் ஏறிக் கொண்டு பாலைவனத்தின் எல்லையில் உள்ள சகோதரிகளின் அரண்மனைக்குப் போனான். ஹாஸனைக் கண்ட அவர்கள் இவ்வளவு விரைவில் மறுபடியும் திரும்பி வந்திருக்கும் அவனை வியப்பு விரிய வைத்த விழிகளால் நோக்கினார்கள்.

''என் அருமைச் சகோதரிகளே! என் மனைவி மறுபடியும் பறவையாகித் தன் இனத்தாரோடு வாழ்வதற்குப் போய் விட்டாள்'' என்று கதறினான். அவனோடு அந்த ஏழு சகோதரிகளும் கண்ணீர் விட்டு அழுதார்கள்.

''வாக்வாக் தீவு எங்கே இருக்கிறது என்று கூறுங்கள். நான் அவளைத் தேடிப் போக வேண்டும்'' என்று கேட்டான் ஹாஸன். ஆனால் அவனைச் சகோதரனாக ஏற்றுக் கொண்ட அவர்கள் அதற்குப் பதில் கூறாமல் மௌனம் சாதித்தார்கள். நீண்ட நேரம் மன்றாடிய பிறகு, சகோதரிகளில் கடைக்குட்டி, ''எங்கள் மாமாவை அழைக்கிறோம். அவர் சிறந்த அறிவாளி. உங்கள் நிலைக்குப் பரிகாரம் காண அவரால்தான் முடியும்'' என்று கூறி நிலா முற்றத்திலே நெருப்பை மூட்டி அதிலே ஏதோ ஒரு பொடியைத் தூவினாள். குபீரென்று கொழுந்து விட்டு எரிந்தது தீ. அதையடுத்துப் பாலைவனத்திலே புழுதிப் புயல் தோன்றியது.. அதன் நடுவிலே ஒருவர் யானை மீது அமர்ந்தவாறு வந்து கொண்டிருந்தார்.

''அதோ எங்கள் மாமா வந்து விட்டார்'' என்றார்கள் சகோதரிகள்.

''குழந்தைகளே! என்னை விரும்பி அழைத்த காரணம் என்ன?'' என்று கேட்டபடி யானை மீதிருந்து கீழே இறங்கினார். சகோதரிகள் ஹாஸனின் பரிதாப நிலையை அவரிடம் கூறினார்கள். அதைக் கேட்ட அந்த முதியவரும் அவன் நிலைக்காக வருந்தினார்.

வீரமொழி

கீழ்ப்படிந்து நடக்கக் கற்றவனே கட்டளையிடவும் அறிவான். முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொள். ஒன்றாகக் கூடி வாழ்வதே நமக்கு வேண்டுவது; சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமை; அதன் மூல ரகசியம் கீழ்ப்படிவதே.

— சுவாமி விவேகானந்தர்

''மகனே! இனி நீ உன் மனைவியை மறந்து விடுவதுதான் விவேகமான செயல். வாக் வாக் தீவை உன்னால் அடைய முடியாது. பறக்கும் பூதங்களும் ஜ்வலிக்கும் நட்சத்திரங்களுமே உன் உதவிக்கு வந்தாலும்கூட அந்தத் தீவுக்குப் போக முடியாது. அந்தத் தீவுக்கும் உனக்கும் இடையே ஏழு கணவாய்களும் ஏழு கடல்களும் வானை முட்டும் ஏழு மலைகளும் உள்ளன. ஆகவே, திரும்பி உன் தாய்நாட்டுக்குப் போய்விடு'' என்றார் யானை மீது வந்த முதியவர்.

''எத்தனை தடைகளானாலும் சரி, நான் வாக் வாக் தீவை அடைந்தே தீருவேன். மனைவியின்றி என் மனைக்குத் திரும்ப மாட்டேன்'' என்றான் ஹாஸன்.

''உண்மையிலேயே நீ தைரியசாலி தான். உன் உறுதியைப் பாராட்டுகிறேன். என்னுடன் வா'' என்று கூறி அவர் ஹாஸனைத் தன் யானை மீது தன் பின்னால் அமரச் செய்தார். மூன்று பகல்களும் மூன்று இரவுகளும் பாலைவனத்தில் பிரயாணப்பட்டு முடிவில் நெடிதுயர்ந்ததொரு நீலமலை அடிவாரத்துக்கு வந்தார்கள். மலையின் பாறைகள் நீல நிறக் கற்களாக இருந்தன. அதில் ஓரிடத்தில் இரும்பாலான ஒரு பெரிய கதவு இருந்தது. யானையை அந்தக் கதவுக்கு வெளியே நிறுத்திவிட்டு இருவரும் இரும்புக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனார்கள். நீண்ட தூரம் குகை வழியே பிரயாணப்பட்டு முடிவில் அதன் குறுகலான பகுதிக்கு வந்தனர். அங்கு இரு பித்தளைக் கதவுகள் இருந்தன. அதன் ஒரு கதவு வழியே கிழவர் மட்டும் உள்ளே போனார். சிறிது நேரத்தில் திரும்பிய அவர் சேணமும் கடிவாளமும் இட்ட அழகிய கம்பீரமான குதிரையுடன் வந்தார். தன் நான்கு கால்களையும் தரையில் ஊன்றாமல்

நர்த்தனமாடியபடியே தாவி ஓடத் தயாரான நிலையில் இருந்தது அக் குதிரை. அதிலிருந்தே அந்த பஞ்ச கல்யாணிக் குதிரை காற்றெனப் பறக்கும் வல்லமை மிக்கது என்பது புலனாயிற்று. ''இதன் குளம்பு பதியும் போது பாலைவனத்தில் எழும் புழுதி இதன் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் பின் தங்கிவிடும்'' என்றார் கிழவர் ஹாஸனை அதன் மீது ஏறி அமரச்சொன்னார். பிறகு இரண்டாவது பித்தளைக் கதவைத் திறந்து அதன் வழியாக அழைத்துப் போனார். அந்தப் பாதையின் முடிவில் பரந்து விரிந்து எல்லையே காண முடியாததோர் பாலைவனம் இருந்தது.

''மகனே! இந்தப் பாலைவனத்தில் இந்தக் குதிரை உன்னைப் பத்துத் தினங்கள் சுமந்தபடி பிரயாணம் செய்யும். பதினோராவது நாள் இது ஒரு குகையின் வாயிலில் போய்த்தான் நிற்கும். அப்போது நீ கீழே இறங்கிக் கொள். குதிரை மட்டும் குகைக்குள் புகுந்து செல்லும். நீ குகை வாயிலிலேயே காத்திரு. ஐந்து நாட்கள் காத்திருந்தாயானால் ஆறாவது நாள் ஒரு கிழவர் உன்னை நாடி வருவார். அவர் தான் எங்களுக்கெல்லாம் தலைவர். அவரிடம் உன் கதையைக் கூறு. அவர் உனக்கு உதவுவார். ஆனால் என்னுடைய புத்திமதி உனக்கு, நீ உன் நாட்டுக்குத் திரும்பிப் போய் வேறு ஓர் அழகியை மணந்து கொண்டு ஆனந்தமாக வாழலாம்'' என்றார் யானைக் கிழவர்.

''என் மனைவியைக் காணாமல் நான் திரும்பப் போவதில்லை'' என்றான் ஹாஸன்.

அவன் மனதை மாற்ற முடியாதென்று அறிந்த அவர் தன் தலைவனுக்கு ஒரு கடிதம் எழுதி ஹாஸனிடம் கொடுத்து அவனை வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்.

மின்னல் வேகத்தில் அந்த மினுமினு மேனி கொண்ட குதிரை பத்து நாட்கள் பாலைவனத்தில் பிரயாணம் செய்தது. பாலைவனத்துக் காட்டுக் குதிரைகள் அதைத் தொடர்ந்து துரத்தி வந்தன. ஆனால் பிடிக்க முடியாமல் களைத்துப் பின்வாங்கின. பதினோராவது நாள் ஒரு குகையின் வாசலில் போய் நின்றது குதிரை. ஹாஸன் கீழே இறங்கினான். குதிரை குகையினுள் புகுந்து மறைந்தது. ஹாஸன் குகை வாசலிலேயே காத்திருந்தான்.

பிரயாணம் செய்த களைப்புத் தீர அவன் அங்கேயே காத்துக் கொண்டிருக்கட்டும்.

முன்னோடிகள்

தற்போதைய விஞ்ஞான கண்டு பிடிப்புக்களுக்கு சில பிராணிகள் முன்னோடிகளாக இருந்திருக்கின்றன கீழே கொடுக்கப்பட்டுள்ள பிராணி. வரிசையில், எந்தப் பிராணி, எதிர் வரிசைக் கண்டு பிடிப்புக்கு முன்னோடி என்று ஒப்பிட்டுச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

(1) வௌவால்	(1) ரடார்
(2) ஆமை	(2) டாங்க்
(3) பச்சோந்தி	(3) காமோ ஃப்ளாஜ்
(4) மீன்	(4) மின்சாரம்
(5) பறக்கும் அணில்	(5) பாராசூட்
(6) பாடும் பறவை	(6) ஹெலிகாப் டர்
(7) தேள்	(7) டாக்டர் போடும் ஊசி
(8) பாம்பு	(8) மயக்க மருந்து

விடை : அதனதன் எதிரே இருப்பது சரிதான்.

1. வௌவால் பறக்கும் போது மனிதர்களுக்குக் கேட்காத, தனக்கு மட்டும் கேட்கக்கூடிய ஒலியை எழுப் பிக் கொண்டே பறக்கிறது. அந்த ஒலி அது பறக்கும்போது எதிர்ப்படும் பொருளில் மோதி எதிரொலிக்கிறது. அந்த எதிரொலியும் வௌவாலுக்கு மட்டுமே கேட்கிறது. அதனால்தான் எதிர்ப்படும் எதிலும் மோதிக் கொள் ளாதபடி, இருட்டிலும் வௌவால் இயல்பாகப் பறந்து செல்கிறது. எதிரிகளின் விமான வரவை — பிற ருக்குக் கேட்காத அதன் ஒலியை, 'ரடார் கிரகித்துக்' கொள்வதற்கு, வௌவால் முன்னோடி.

2. மெதுவே ஊர்ந்து சென்றாலும் பலம் மிக்க, எளிதில் சாகடிக்க முடி யாத ஆமை, போர்முனை 'டாங்க்' குக்கு முன்னோடி.

3. எளிதில் வண்ணத்தை மாற்றிக் கொள்ளும் பச்சோந்தி, போர்முனை யில் எதிரியிடம் பிடிபடாமல் இருக்க, இலைதழைகளுடன் மறைந்து கொள்ளப் போர்வீரன் சூடிக் கொள்ளும் 'காமோ ஃப்ளாட்ஜ்' ஜுக்கு முன்னோடி.

4. தன்திசையை அறிந்து கொள்ள மீன் தன்னிடமுள்ள மின்சக்தியைப் பயன் படுத்திக் கொள்கிறது. ஈல் போன்ற மீன் இனங்கள், தன் இரை மீது மின்சாரத்தைச் செலுத்தி, அதைக் கொன்று பிறகு உண்கிறது. இது மின்சாரக் கண்டுபிடிப்புக்கு முன்னோடி.

5. பறக்கும் அணில் தன் முன்னங் கால்களையும், பின்னங்கால்களையும், உடலுக்கு வெளியே பரப்பிக்கொண்டு ஒரு குடை போன்ற அமைப்பை உருவாக்கிக் கொண்டு பறக்கும். பாராசூட்டுக்கு இதுவே முன்னோடி.


6. பாடும் பறவை, பின்னோக்கி யும், பறக்கும்; அந்தரத்தில் அப்ப படியே நிற்கவும் செய்யும். இந்த 'ஹம்மிங் பர்டு'தான் ஹெலிகாப் டருக்கு முன்னோடி.

7. தேளின் கொடுக்கு விஷத்தைக் கொட்டுகிறதே — மனித உடலில். ஊசியாய் கொடுக்கை இறக்கி, விஷத் தையும் இறக்குகிறதே — இதுதான் டாக்டர் போடும் ஊசிக்கு முன்னோடி.

8. பாம்புகளில் சில வகை மிகவும் கொடியது. அது கடித்தால் உடலே மரத்துப் போய் செயலற்றதாகிவிடும். ஆபரேஷன் செய்யும் போது குறிப் பிட்ட பகுதி மரத்துப்போக மயக்க ஊசி போடுகிறார்களே, அதன் முன் னோடி, இந்தப் பாம்புகள்தான்.

- ஆடபன் மாகவின்

தொகுப்பு : பிரபு சங்கர்



நிலா சிரித்தது

எஸ்.சியாமளா



4. ஆத்திரம்

வாகீசன் மாமா ரொம்ப நல்லவர். அவருடைய சின்ன வயதில் பானுவின் அம்மா அன்பாக இருந்திருக்கிறாள். அனாதையாக வந்தவனிடம் அனுதாபமாக இருந்திருக்கிறாள். அவர் பெரிய நிலைமைக்கு வந்த பிறகும் அவளை மறக்காமல் இருந்திருக்கிறாரே. நன்றி மறக்காமல் இருப்பதே நல்ல பண்பில்லையா? அவர் பானுவைத் தம் சொந்த மகளைப் போலவே பாசமும் பரிவுமாக அழைத்து வந்திருக்கிறார்.

அவரையும் விடச் சொர்ணம் மாமியும் நல்லவள் என்று தானே சொல்ல வேண்டும். கணவர் யாரோ ஓர் அனாதைப் பெண்ணை வீட்டுக்கு அழைத்து வந்து விட்டதாக எண்ணவில்லை. இந்துவுக்குச் சமமாகப் பானுவை நடத்த வேண்டும் என்ற கட்டளை எதுவுமில்லை. வேலைக்காரப் பெண்ணாகக் கூட நினைத்திருக்கலாம். ஆனால் சொர்ணம், வாகீசன் மாமா தேர்ந்து எடுத்த மனைவி, அவருக்கேற்ற குணமுள்ளவளாக இருப்பது அதிர்ஷ்டமில்லையா? சொர்ணம் பெருந்தன்மை யானவள். பணக்கார மமதை துளியும் இல்லை. ஆனால் ரொம்பவும் ஒட்டி ஒட்டி உணர்ச்சி வசப்படுபவள் இல்லை. எதிலும் நிதானமுள்ளவள். அமைதியானவள். யாரையும் எதற்கும் வற்புறுத்த மாட்டாள். அவரவர் இஷ்டப்படி நடக்க உரிமை கொடுப்பவள். ஆனாலும் அவளை யாராலும் ஏமாற்ற முடியாது. சுந்தரியும் பொன்னியும் ஒதுங்கியே ஆனாலும் பணிவோடு நடப்பதிலிருந்து சொர்ணுவின் கம்பீரத்தை, கவரும் தன்மையை உணர்ந்து கொள்ளலாம்.

இப்படிப்பட்டவர்களின் பெண்ணான இந்துவுக்கு ஏன் இப்படி ஒரு மாறுதலான குணம்? செல்லப் பெண்ணாக வளர்ந்த சூழ்நிலை காரணமோ ....? எதையும் பிடிவாதமாகச் சாதித்துக் கொள்ளும் தன்மை. அவள் இஷ்டத்துக்கு விரோதமாக எதிர்ப்பு இருந்தால் தானே பிடிவாதம் இருக்க வேண்டும். வீட்டில் எந்த விஷயத்திலும் எதிர்ப்பு இல்லை. சுதந்திரமாக, இளவரசியாக வீட்டில் இருக்கிறவள். ஆனால் வெளியில் அப்படியே இருக்க முடியுமா? பள்ளியில் இவளைவிட அழகான, இவளைவிடத் திறமையானவர்கள் இருக்கும்போது பிடிவாதத்தைக் காட்ட முடியுமா? அந்த எரிச்சலும் ஆத்திரமும் அலட்சியமான போக்கில் வெளி வரும்.

''அடியே... அந்த நீலு எத்தனை சிவப்பா அழகா இருக்காள்....'' என்பாள் ஒருத்தி. இந்து முகத்தைச் சுழிப்பாள்.

''ஐயே... அவளைப் போய் அழகு என்கிறாயே....சே....'' என்பாள்.

''இந்து! சுசீலாவுக்கு எத்தனை அடர்த்தியான தலை மயிர் ....அம்மாடி.. எத்தனை நீளம்....!'' என்று வாயைப் பிளப்பாள் ஒரு பெண்.

''அதுவா? அழகு...? சுருண்டிருந்தால்தான் அழகாக இருக்கும் '' என்று தன் பின்னலைத் தடவிக் கொள்வாள்.

விளையாட்டுப் போட்டிகளிலும் முதன்மையாக வருபவர்களைப் பாராட்ட மாட்டாள்.

படிப்பில் முதலாக வந்து விட்டாலோ அவர்களைக் காப்பி அடித்தார்கள் ''.... டீச்சருக்குச் சலாம் போட்டுக் காக்காய் பிடித்தார்கள்...'' என்று ஆத்திரப்படுவாள். பள்ளிக்கூடத்தில் பலருக்கு இந்துவின் குணம் தெரிந்து விட்டது. அதனால் அதிகமாக வாய் கொடுக்காமல் பழகுவார்கள். பெற்றோருக்குப் பெண்ணின் இந்த அகங்கார குணம் தெரியும்தான். ஆனாலும் அதைப் பெரிதுபடுத்துவதில்லை. வயதானால் சரியாகி விடும் என்று இருந்தார்கள். அதிலும் அவளையே கவனிக்க அவர்களுக்குப் பொழுது இருக்கவில்லை.

சின்னப் பெண்ணானாலும் இரண்டே நாட்களில் பானு இந்துவை நன்றாகப் புரிந்துகொண்டுவிட்டாள். சம வயதினளான அவள் தன்னோடு நட்பாகப் பழகாமல் ஒதுங்கியிருப்பது பானுவுக்கு ஏக்கமாக இருந்தாலும் அவளை வெறுக்கவில்லை. ஒரே வீட்டில் வளரப் போகும் அவர்கள் கட்டாயமாக ஒரு நாள் இணைந்தே ஆக வேண்டும். அதுதான் பானுவின் லட்சியம். இந்துவின் அன்பைப் பெற்றே ஆக வேண்டும். பானுவின் சின்ன இதயத்தில் ஆசை வளர்ந்தது. ஆனால் அவள் அவசரப்படவில்லை.

''பானு ...'' மாமா அழைத்தார்.

''என்ன மாமா....?'' அருகில் வந்தாள்.

''கான்வெண்டில் விசாரித்தேன். அவர்கள் ஒப்புக் கொண்டு விட்டார்கள். ஆனால் இங்கிலீஷ் அதிகமாச்சே. அதற்கு டியூஷன் வைத்து விடுகிறேன். ஐந்தாவது வகுப்புக்கு உனக்குச் சிரமமாக இருக்கும்'' என்றார்.

''மாமா! அத்தனை கஷ்டப்பட்டாவது அந்த வகுப்பில் ஏன் மாமா சேர்க்க வேண்டும்? நான் நாலாவது வகுப்பில் சேர்ந்து கொள்ளுகிறேன். டியூஷனும் வேண்டாம். நானே படித்துக்கொள்ளலாம்...'' என்றாள் பானு.

''முதலில் பெரிய டீச்சரும் அப்படித்தான் சொன்னாள். ஆனால் ஒரு வருஷம் வீணாகப்போகுமே என்று நான் தான் நினைத்தேன்.''

''பரவாயில்லை மாமா! பெரிய வகுப்பில் சேர்ந்து குறைந்த மார்க்கு வாங்குவதைவிடக் கீழ் வகுப்பில் சேர்ந்து முதலாக வரலாமே....''

''குட்....வெரி குட்... பானு! நீ ரொம்ப சமர்த்து பெண்ணாக இருக்கிறாயே....'' என்றாள் சொர்ணம்.. வாசீசனும் பானுவைத் தட்டிக் கொடுத்தார்.

''அப்ப சரி, நாளைக்கே உன்னை நாலாவது வகுப்பில் 'அட்மிட்' பண்ணி விடுகிறேன். ஸ்கூல் திறந்து இரண்டு மாதம்தானே ஆகிறது. அதனால்தான் உனக்குச் சுலபமாக இடம் கிடைத்தது...'' என்றார்.

''பானு! சாயந்திரம் துணிக்கடைக்குப்போக வேண்டும்... தயாராக இரு... என்ன? உனக்கு ஸ்கூல் 'யூனிபாரம்' தைக்க வேண்டும். நல்லதாக நாலு 'ப்ராக்' வாங்க வேண்டும்'' என்றாள் சொர்ணம்.

''மாமி! ஸ்கூல் டிரஸ் மட்டும் தைத்தால் போதும். 'ப்ராக்' வேண்டாம் மாமி! எனக்குப் பாவாடை சட்டை போட்டே பழக்கமாயிடுத்து. இப்ப நிறையப் பாவாடை சட்டைகள் இருக்கு. கொஞ்ச நாட்கள் கழித்து வாங்கலாமே...'' என்றாள் நிதானமாக. அந்தக் குழந்தையின் 'திருப்திப்படும்' மனதைக் கண்டு தம்பதிகள் இருவரும் கண்களாலேயே ஆச்சரியப்பட்டு நின்றார்கள்.

''சரியம்மா. உன் இஷ்டப்படியே செய்தால் போச்சு....'' என்று சொர்ணம் தன் அலுவல்களைக் கவனிக்கப் போய்விட்டாள். மாமாவும் ஆபீசுக்குப் போய் விட்டார்.

பானுவின் மனத்தில் நிம்மதி படர்ந்தது. இந்துவோடு ஒரே வகுப்பில் படித்தால் பல சங்கடங்கள் நேரும். பானு நிறைய மார்க்குகள் வாங்கி விட்டால் இந்து எரிச்சல் அடைவாள். மேலும் வகுப்பு மாணவிகள் எதிரில் இந்து பானுவோடு நெருங்கிப் பழகாமல் பேசாமல் இருந்தால் வம்புப் பேச்சுக்கு இடம் உண்டாகும். பானுவுக்கும் மனம் வேதனைப்படும். ஒரே வீட்டில் இருக்கும்



பெண்கள் ஒற்றுமையாக இல்லாமல் இருப்பது கேலிக்கு இடம் ஏற்படும். அவர்கள் இருவருக்கும் இடையே மற்ற மாணவிகள் கட்சி பிரிந்து பெரிதாகப் பிளவு ஏற்பட்டு விடும். அதனால் இந்துவோடு சேர்ந்து படிக்காமல் நாலாவது வகுப்பில் சேர்ந்தால் பல விதங்களிலும் நன்மை. இதை பானு இரண்டு நாட்களாக யோசித்து முடிவு செய்திருந்தாள்.

பானு பள்ளிக்குப் போக ஆரம்பித்து விட்டாள். அவளுடைய சரளமான குணத்தினால் சக மாணவிகளிடையே மதிப்பு உயர்ந்தது. கூர்மையான புத்தியினால் எதையும் உடனே புரிந்து கொண்டாள். கிராமத்தில் இங்கிலீஷ் இல்லா விட்டாலும் அபீதா மகளுக்கு ஆரம்பப் பாடங்களை நன்றாகக் கற்றுக் கொடுத்திருந்தாள். இங்கு தோழிகளும் அவளுக்குப் பலவிதங்களில் உதவி செய்தனர்.

மாலை நேரங்களில் பானுவின் வகுப்புத் தோழி சுநீதா வருவாள். அவள் வீடு அருகில் இருந்தது. பானுவிடம் கணக்குக் கற்றுக் கொண்டு, அவளுக்கு இங்கிலீஷ் கற்றுக் கொடுப்பாள். இருவரும் கார்த்திக்கோடு சில சமயம் விளையாடுவார்கள். லீவு நாட்களில் டிரைவரின் துணையோடு குழந்தைகளைக் கடற்கரைக்கு அனுப்புவார் வாகீசன். அப்போது இருவருடைய தோழிகளான ப்ரீதா, கலா, சுநீதா மூவரும் வருவார்கள். பானு உற்சாகமாக அலைகளில் நின்று கொள்வாள். மணலில் 'கிகிகி தாம்பாளம்' விளையாட்டு விளையாடுவார்கள். கார்த்திக்கோடு ஓடிப் பிடித்து விளையாடுவார்கள்.

ஆரம்பத்தில் ஒருநாள் வாகீசன் இந்துவிடம், ''இந்து! பானுவுக்கு இங்கிலீஷ் தெரியாததைக் கற்றுக் கொடம்மா...'' என்றார்.

''ஆகட்டும் அப்பா...'' என்றுபதில் கூறினளே தவிர அவள் பானுவிடம் ஒன்றும் கேட்கவில்லை. பானுவும் அவளிடம் கற்றுக் கொள்ளவில்லை.

''என்னம்மா பானு! இன்னைக்கு உங்க டீச்சரைப் பார்த்தேன். நன்றாகப் படிக்கறதாச் சொன்னாள். 'வீக்லி டெஸ்ட்'டில் இங்கிலீஷிலும் எழுபது மார்க் வாங்கியிருப்பதாகச் சொன்னாளே. இந்துவிடம் கற்றுக் கொண்டாயாம்மா...'' என்று வாகீசனிடம் கேட்ட போது, ''ஆமாம், மாமா...'' என்றாள் பானு. இந்து ஒரு கணம் திகைத்தாள். பிறகு மௌனமாகப் பானுவைப் பார்த்து விட்டுப் போய் விட்டாள். முதல் தடவையாக இந்துவின் மனம் குழம்பியது. பானு ஏன் அப்படி சொன்னாள்? இந்து கற்றுக் கொடுக்க வில்லை என்று சொல்லியிருக்கலாமே, அவளைப் பற்றி அப்பாவிடம் புகார் சொல்ல இஷ்டப்படவில்லையோ?

கால் பரீட்சை நெருங்கி வந்தது.

ஒருநாள் காலை பானு பல் தேய்த்து விட்டு வரும் போது டைனிங் ஹாலில் சொர்ணம் ''இந்து! பரீக்ஷை வருகிறதே... பானுவைப் பார். விடியற்காலை எழுந்து படிக்கிறாள்'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள். இந்துவின் முகம் ஜிவுஜிவுப்பதை வாசற்படியருகில் நின்று கவனித்து விட்ட பானு சட்டென்று ஏதோ ஒன்று நினைவுக்கு வந்தவளாக இலேசாகச் சிரித்தாள்.


''இல்லே மாமீ! ராத்திரி 'கரெண்ட் ஆப்' ஆச்சே. அப்ப விளக்கை அணைக்க மறந்து போய்த் தூங்கிட்டேன். அதனால் காலையில் தானாக லைட் எரிஞ்சிருக்கு. நான் காலையில் படிக்கணும்னு தான் நினைக்கிறேன் .... தூக்கம் வருது...'' என்றாள் குழந்தைத் தனமாக.

''அப்படித்தான் தூக்கம் வரும். எல்லோருக்கும் வழக்கம் தான். நானேயிருந்து நானே இரண்டு பேரையும் எழுப்பிவிடுகிறேன். படியுங்கள்'' என்றாள் சொர்ணம். ஆத்திரத்தினால் சிவந்த இந்துவின் முகம் சில நிமிஷங்களில் தெளிவடைந்தது. ஆனால் இருவரும் காப்பி குடித்து விட்டுத் திரும்ப மாடிக்குப் போகும் போது எதிரில் வந்து கொண்டிருந்த சுந்தரி பானுவிடம்,

''பானு! விடியற்காலை வேளையில்..... குளியலறைக்குத் தனியாப் போகாதே. என்னை எழுப்பு. நான் வரேன்'' என்றாள் மெதுவாக. பிறகு உள்ளே போய் விட்டாள். நாலைந்து படிகள் முன்னால் ஏறிவிட்ட இந்து திகைப்புடன் திரும்பிப் பார்த்தாள். பானுவும் அவளைப் பார்த்து விட்டுக் குனிந்து கொண்டாள். இந்து எண்ணமிட்டபடி தன் அறைக்குச் சென்றாள். 'பானு நிஜமாகவே விடிகாலை எழுந்து விட்டாள். அம்மாவிடம் ஏன் அப்படிப் பொய் சொன்னாள். எதற்காக... எதற்காக..? ஒவளுக்காகவா. அவளை அம்மா அன்றும் சொல்லாமலிருக்கவா. அவள் மனம் வேதனைப்படாதிருக்கவா?'

இந்து குழம்பினாள். மறு நாள் முதல் சொர்ணம் இருவரையும் எழுப்பிப் படிக்கச் சொல்லி விட்டுத் தன் அறைக்குப் போய் விடுவாள். இருவரும் படித்தார்கள். (தொடரும்)

அத்திம்பேரை அனுப்புவது எப்படி?



கோதையூர் மணியன்

ராமன் கொஞ்சம் கெட்டிக்காரன் எந்தக் காரியத்திலும் புத்தி சாதுர்யமாக நடந்து கொள்வான். தன் நண்பர்களுக்கெல்லாம் அவன்தான் யோசனை சொல்வான்.

ராமனும் சுசீலாவும் அண்ணன், தங்கைகள். ராமனுக்கும் சுசீலாவுக்கும் மீனு என்று ஒரு அக்கா உண்டு. அந்த மீனு அக்காவுக்கு இப்போதுதான் கல்யாணம் ஆகி யிருந்தது.

மீனுவின் கணவரின் பெயர் சிவராமன். அவர் சென்னையில் வேலை பார்த்து வந்தார்.

தீபாவளிக்குச் சிவராமனை வீட்டுக்கு 'மாப்பிள்ளை விருந்துக்காக' மீனுவின் அப்பாவும் அம்மாவும் அழைத்திருந்தார்கள்.

மீனுவும், சிவராமனும் ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு வந்தார்கள். தினசரி மாப்பிள்ளை சிவராமனுக்கு விருந்து தடபுடலாக இருந்தது.

ஒரு வாரம் ஆயிற்று. மாப்பிள்ளை ஊருக்குக் கிளம்புகிற மாதிரி தெரியவில்லை. ஆகவே மீனுவின் அப்பாவும், அம்மாவும் கவலைப் படத் தொடங்கினார்கள். ஏனென்றால் மாப்பிள்ளை விருந்துக்குச் சேர்த்து வைத்திருந்த பணமெல்லாம் காலியாகி, மேலும் நூறு ரூபாய் கடன் வாங்கியாகி விட்டது.

தன் அப்பாவும், அம்மாவும் மாப்பிள்ளை ஊருக்குப் புறப்படாததால் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டான்.

எப்படியாவது மாப்பிள்ளை சிவராமனை ஊருக்குக் கிளப்பிவிட வேண்டும் என்று திட்டம் தீட்டினான்.

தங்கை சுசீலாவைக் கூப்பிட்டான். அப்பாவும், அம்மாவும், மாப்பிள்ளை ஊருக்குப் போகாததால் கவலைப் பட்டுக் கொண்டிருப்பதாகவும் சொன்னான்.

''அதுக்கு நாமெ என்ன செய்யறது ராமு?'' என்று கேட்டாள் சுசீலா.

ராமன் தன் திட்டத்தைச் சொன்னான், ''நம்ம அத்திம்பேர் மெட்ராஸிலே வேலைபார்க்கறார் இல்லியா...? அந்த ஆபீஸ்லேர்ந்து, நம்ம அத்திம்பேரைக் கூப்பிடறாப்லே ஒரு லெட்டர் எழுதிப் போட்டுடணும்... நம்ம அத்திம்பேர் அந்த லெட்டரைப் படிச்சதும், உடனே ஊருக்குக் கிளம்ப ஏற்பாடு பண்ணிடுவார். ஏன்னா, உடனே போகாட்டா, ஆபீஸ்காரங்க அத்திம்பேரை வேலையை

புகைப்படம்: வித்யாசங்கர்



பிறந்த நாளில் பரிசு தந்தார்
பல பல மிட்டாய் – இந்த
விரல்களுக்கு இருக்கும் ருசி
எதனிலும் காணேம்.

விட்டுப் போகச் சொல்லி விடு வாளோன்னு பயந்து ஊருக்குப் போய்டுவார்.''

''நல்ல யோசனைதான்... நான் போஸ்டாபீஸுக்குப் போய் கவர் வாங்கி வந்துடறேன்'' என்ருள் சுசீலா.

''சரி. ஓடு சீக்கிரமா வாங்கிவா. அப்பா அம்மா அக்காவுக்கு விஷயம் தெரியக்கூடாது... சீக்கிரம் ஓடிவா...'' என்று சுசீலாவைக் கவர் வாங்க அனுப்பினன்.

சிவராமன் யாருக்கோ லெட்டர் எழுதிக் கொண்டிருந்தார். ராமன் அவர் அருகில் போய்நின்று ''யாருக்கு, அத்திம்பேர் லெட்டர் எழுதறேள்?'' என்று கேட்டான்.

அவர், ''எங்க ஆபீஸுக்கு எழுதறேன். லீவு தீர்ந்திடுத்து. இன்னும் ஒருவாரம் லீவு கேட்டு எழுதறேன்'' என்ருர்.

ராமனுக்கு 'பக்'கென்றது. இன்னும் ஒருவாரம் லீவா...? ஐயையோ... அப்பாவும் அம்மாவும் தாங்கமாட்டாளே...' என்று மனத்துள் வருந்திக் கொண்டான்.

பிறகு, ''ஏன் அத்திம்பேர்? உடனே புறப்பட்டு வாங்கோன்'னு ஆபீஸ்லேர்ந்து லெட்டர் வந்தா என்ன பண்ணுவேள்?'' என்று கேட்டான்.

அவர், ''ஆபீஸ்லேர்ந்து கூப்பிட்டா உடனே போக வேண்டியதுதான். இல்லேன்னு வேலையை விட்டுப்போகச் சொல்லிடுவாளே...'' என்றுசொன்னர்.

'அப்படியா சங்கதி. பேஷ் நம்ம ஐடியாதான் சரி. இன்னிக்கே லெட்டர் எழுதிப் போட்டுட்டா நாளைக்கே வீட்டுக்கு வந்திடும். அத்திம்பேர் பயந்துபோய் ஊருக்குக் கிளம்பிடுவார்' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டு, சுசீலா கவர் வாங்கி வந்து விட்டாளா என்று பார்க்கச் சென்ருன்.

சுசீலா கவர் வாங்கிகொண்டு வந்திருந்தாள்... ராமன் தனது யோசனைப்படி அத்திம்பேர் பெயருக்குக் கடிதம் எழுதி, சுசீலாவை தபால் ஆபீஸில் போட்டுவரச் சொன்னன்.

மறுநாள் ராமனும் சுசீலாவும் தபால்காரரை எதிர்பார்த்துக் கொண் டிருந்தார்கள். தபால்காரர் வந்து தபாலைக் கொடுத்தார். அந்தத் தபாலை அத்திம்பேரிடம் ஓடிப் போய்க் கொடுத்தான் ராமன்.

அத்திம்பேர் லெட்டரைப் படித்து விட்டு, ராமனைப் பார்த்தார்.

ராமன், ''என்ன அத்திம்பேர் யார் லெட்டர் போட்டிருக்கா?'' என்று ஒன்றும் தெரியாததுபோலக் கேட்டான்.

சிவராமன், ''ராமு, என்னை உடனே புறப்பட்டு வரச்சொல்லி ஆபீஸ் லேர்ந்து லெட்டர் போட்டிருக்கா... உடனே போகணும்... உங்க அக்காவை ரெடி பண்ணச் சொல்லு'' என்ருர்...

தன் திட்டம் பலித்துவிட்ட சந்தோஷத்தில் அக்காவிடம் ஓடிச்சென்று, ''அக்கா அத்திம்பேர் ஊருக்குக் கிளம்பறுர், உன்னையும் ரெடியாகச் சொன்னுர் சீக்கிரம்...'' என்று சொன்னன்.

மீனுவுக்குத் தம்பி சொல்வது பொய்யா நிஜமா என்று புரிந்து கொள்ள முடியவில்லை.

அப்பாவுக்கும், அம்மாவுக்கும் மாப்பிள்ளை ஊருக்குக் கிளம்பப் போவதில் மகிழ்ச்சி பொங்கியது. 'அப்பாடா' என்று ஆசுவாசப் பட்டார்கள்.


மாப்பிள்ளையும், மீனுவும் ஊருக்குக் கிளம்பினர்கள். ரயில்வே ஸ்டேஷனுக்கு ராமனும் கூடப் போனன்.

ரயில் புறப்படும் நேரத்தில் ராமனைத் தனியே அழைத்த மாப்பிள்ளை, ''ராமு லெட்டர் நன்னு எழுதியிருக்கே... புத்தி சாலித்தனமும் இருக்கு. நல்லா முன்னுக்கு வருவே...'' என்று பாராட்டினர்.

ராமன் 'திருதிரு'வென்று விழித்தான்.

''ராமு, லெட்டர் எழுதிப் போட்டது நீதான்னு எனக்குத் தெரியும். ஏன்னு லெட்டர்லே 'அன்புள்ள அத்திம்பேருக்கு'ன்னு எழுதியிருக்கு. ஆபீஸ்லேர்ந்து எழுதினு, டியர் மிஸ்டர் சிவராமன்னு' டைப்பண்ணி அனுப்புவா! புரிஞ்சுதா...? இருந்தாலும் உன்னேட புத்தி சாதுர்யத்தை நான் ரொம்ப மெச்சறேன்...''

அத்திம்பேர் பாராட்டிவிட்டுத்தான் போனர். ஆனல் ராமனுக்குத்தான் அசடு வழிந்து கொண்டிருந்தது.



வெங்காயம் தெரியும், வெண்காரம் தெரியுமா?

அ.ராம்கோபால்

அம்மை குத்திக்கொண்டால் கொப்புளித்துப் புண் ஆகிறது. அந்தப்புண்ணை ஆற்றுவதற்குப் போரிக் பவுடரைத் தேங்காய் எண்ணெயில் கலந்து போடுகிறோம். பொதுவாக மற்ற புண்களையும் ஆற்ற 'போரிக் ஆயின்ட்மெண்ட்' எனப்படும் போரிக் களிம்பு பயன்படுகிறது.

திபெத்தில் பல உப்பு ஏரிகள் உள்ளன. நம் நாட்டில் காஷ்மீரைச்சேர்ந்த லடாக் பகுதியிலும் பல உப்பு ஏரிகள் உண்டு. இந்த ஏரி நீர் கோடையில் வற்ற வற்ற அவற்றிலிருந்து பல வகை உப்புக்கள் கிடைக்கின்றன. அதில்ஒன்று பொராக்ஸ் (Borax) ஆகும். அமெரிக்காவில் மரணப் பள்ளத்தாக்கில்பொராக்ஸ் ஏரி ஒன்றும் உள்ளது. பொராக்ஸுக்கு இரசாயன சாஸ்திரத்தில் சோடியம் பைரோபோரேட் (Sodium Pyroborate) எனப் பெயர். இதிலிருந்து தயாரிக்கப்படுவதே போரிக் பவுடர். இதை போரிக் ஆஸிட் என்றும் பொராசிக் ஆஸிட் (Boracic acid) என்றும்கூடக் கூறுவார்கள். தமிழில் வெண்காரம் என இதற்குப் பெயர்.

தங்கம்

உலோகங்களை உருக்குவதற்கு மிக அதிக வெப்பம் தேவைப்படுகிறது. ஆனால் சில உலோகங்களை வேறு சில பொருள்களோடு சேர்த்து உருக்கினால் எளிதில் உருகிவிடும். இப்படிக்குறைந்த வெப்பத்தில் உலோகங்கள் உருகஉதவும் பொருட்களை ''ஃப்ளக்ஸ்'' Flux என சொல்லுவார்கள். தங்கத்தை உருக்குவதற்கு அதோடு வெண்காரத்தைச் சேர்த்துக் கொண்டால் குறைந்த வெப்பத்தில் உருகிவிடும். இதன் காரணமாக வடநாட்டில் ''ஸோனே மே ஸுஹாகா'' என்ற பழமொழி ஒன்றும்கூட வழங்குகிறது. தங்கத்தில் வெண்காரம் கலந்தது போல் என இதற்குப் பொருள். பற்ற வைப்பதற்கும் மின்சார உலோகப்பூச்சு செய்வதற்கும் இது பயன்படுகிறது.

கண்ணாடி

வெண்காரம் உலோகங்கள் எளிதில் உருக உதவுவதோடு மட்டுஅல்லாமல் தானே உருகி உயர்தரக் கண்ணாடிகள், எனாமல் பொருள்கள் தயாரிப்பதற்கும் உதவுகிறது. பீங்கான் பாத்திரங்கள், காகிதம், சீட்டுக் கட்டுகள், பளபளப்பாக இருக்க உதவுவதும் இந்த வெண்காரம்தான். கிருமிகளைக் கொல்லும் இயல்பு இதற்குஇருப்பதால் வாசனைச் சோப்புக்கள், அழகு சாதனங்கள், லோஷன்கள் பலவகை உணவுப் பண்டங்கள் தயாரிப்பிலும் இது சேர்க்கப்படுகிறது.

'பீன்ஸ்' விளைச்சல்

போரோன் (Boron), சோடியம் (Sodium), பிராண வாயு மூன்றும்கலந்த ஒரு கூட்டுப் பொருளே வெண்காரம். சில வகைத் தாவரங்கள் நன்றாக வளர்ந்து சிறந்த பலன் அளிக்க போரோன் அத்தியாவசியம். உதாரணமாக பீன்ஸ் விளையும் நிலங்களில் போரோன் சத்துப் போதுமானஅளவு இல்லாது போனால் வெண்காரம் தவிர வேறு எந்த உரம் இட்டாலும் அவை நன்றாக வளருவதில்லை.

ராக்கெட்

இந்தக் காலத்தில் ராக்கெட்டுகளை வானவெளியில் ஏவுவதற்கு எரிபொருளாக போரோனும் நீரகமும் (Hydrogen) பயன்படுகின்றன. மோதலை







எதிர்த்து நிற்கும் உருக்கு (Impact resistant steel) தயாரிக்கவும் போரோன் உபயோகிக்கப்படுகிறது.

சோடியம் பர்போரேட்

சோடியம் பர்பொரேட்டும் ஒரு முக்கிய போரோன் கலப்புப் பொருள். அது அழுக்கை அகற்ற வெகுவாகப் பயன்படுகிறது. வீடுகளில் துவைக்கப் பயன்படும் டிடெர்ஜெண்ட் பவுடர்களில் 20 சதவிகிதம் வரை சோடியம் பர்பொரேட் கலந்துள்ளது. வாய் சுத்தம் செய்யும் கலவையிலும் சேர்ந்துள்ளது. வெட்டிய மரங்களைப் பூச்சிகள், வண்டுகள் போன்றவை தாக்காமல் பாடம் செய்யவும் போரோன் கலவை பயன்படுகிறது. மரங்களை வெப்பமான போரோன் கலவையில் பல வாரங்கள் வரை ஊறப்போடுவார்கள். அப்போது கலவையில் உள்ள போரோன் மரத்துக்குள் சென்று அங்கு தங்கி விடும். இதனால் வண்டுகள், பூச்சிகள் அம்மரங்களைத் தாக்குவதில்லை.

பெயின்ட்

கடந்த சில ஆண்டுகளாகக் கிருமிநாசினி பெயிண்ட் தயாரிக்கப் பேரியம் மெடபோரேட் (Barium Metaborate) பயன்படுகிறது. இந்தப் பெயிண்ட் இப்போது வெப்ப நாடுகளில் அதிகமாகப் பயன்படுகிறது.

இரண்டாவது உலகப் போருக்கு முன்பு போரோன் ஹைட்ரைடு (Boron Hydride) பற்றி அதிகமாக யாருக்கும் தெரியாது. அந்தப் போர்க் காலத்தில் ஸ்டாக் என்ற விஞ்ஞானியும் அவரது உதவியாளர்களும் மாக்னீஷியம் பொரேட்டை நீர்க்கச் செய்து டைபோரோன் தயாரித்தார்கள். இது விமானங்களில் மிக அதிகச் சக்தியை உற்பத்தி செய்யும் எரிபொருளாக Fuel இப்போது பயன்படுகிறது.

காஷ்மீரில்

இவ்விதம் நமக்குப் பல துறைகளில் பயன்படும் வெண்காரம் நம் நாட்டில் கிழக்கு காஷ்மீரில் ரூப்ஷுவைச்சேர்ந்த பூகா (Puga) பள்ளத்தாக்கில் கடல் மட்டத்துக்கு மேல் 5000 அடி உயரத்தில் உள்ள பல வெந்நீரூற்றுகள்மூலம் கிடைக்கிறது. இந்தஊற்றுக்களின் ஓரத்தில் கந்தகம், கல்லுப்பு முதலியவற்றுடன் கலந்து இது படிந்துள்ளது. இந்தப் படலங்களைச் சேகரித்து அதிலிருந்து வெண்காரம், கல்லுப்பு, கந்தகம் முதலியவற்றைத் தனித்தனியே பிரித்தெடுக்கிறார்கள்.

ஆற்றிலே விழுந்தவன் ஆபத்தில் உதவினன்!

சர்ச்சில் சிறு பையனாக இருந்த போது ஒருநாள், இங்கிலாந்திலுள்ள ஓர் ஆற்றங்கரையோரமாக நடந்து போய்க் கொண்டிருந்தார்.

அந்த ஆற்றங்கரையில் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. ஓர் இடைச் சிறுவன், ஒரு கல்லின் மேல் உட்கார்ந்து கொண்டு, கற்களைத் தண்ணீரில் எறிந்து விளையாடிக் கொண்டிருந்தான்.

சர்ச்சில் அவனையும் அவன் செய்கைகளையும் பார்த்து ரசித்த வண்ணம் நடந்து கொண்டிருந்தார்.

திடீரென்று அச்சிறுவன் ஆற்றில் தவறி விழுந்து விட்டான். அவனுக்கு நீந்தத் தெரியவில்லை; தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தான். அவன் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது.

சிறிதும் தயங்காமல் சர்ச்சில் ஆற்றில் குதித்து, அச்சிறுவனைக் கரைக்குக் கொண்டு சேர்த்தார்.

சர்ச்சிலுக்கு நன்றி கூறிவிட்டுச் சிறுவன் வீடு போய்ச் சேர்ந்தான். சர்ச்சிலும், ஓர் உயிரைக் காப்பாற்றிய பெருமிதத்தில் வீடு போய்ச் சேர்ந்தார்.

வருடங்கள் கழிந்தன.

சர்ச்சில் ஓர் அரசியல் மேதையானார். உலகம் எங்கும் அவர் புகழ் பரவிற்று.

ஒருநாள் சர்ச்சிலுக்குக் காய்ச்சல். அவர் உயிருக்கு ஆபத்து வந்து விட்டதென்று எல்லோரும் எண்ணினர்.

அப்பொழுது ஒரு மருத்துவர் அங்கு வந்தார். தம்மிடமிருந்த ஒரு புதிய ஊசி மருந்தை சர்ச்சிலின் உடலினுள் செலுத்தினர். சில நாட்களில் சர்ச்சில் குணமடைந்தார்.

அந்த மருத்துவர் சர்ச்சிலின் உடலினுள் செலுத்திய மருந்து 'பென்சிலின்', மருத்துவர் பெனிசிலினைக் கண்டுபிடித்த அலெக்ஸாண்டர் ஃபிளெமிங்'!

'அலெக்ஸாண்டர் ஃபிளெமிங்' தான் அன்று சர்ச்சிலால் காப்பாற்றப்பட்ட இடைச் சிறுவன்!

ஆதாரம்: 'நினைவு அலைகள்' என்ற நூல்.

தகவல் : என்.எஸ். நாதன்.

நகரங்கள் எவை?

புவியியலில் இந்தியாவில் உள்ள நகரங்களைப்பற்றிப்! படித்திருப்பீர்களே எங்கே, கீழ்க்கண்ட கேள்விகளுக்கு 'டாண், டாண்' என்று பதில் கூறுங்கள் பார்ப்போம்.

1) எந்த நகரத்தில் சுகமாக உறங்கலாம்?

2) இந்த நகரில் நாயைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. ஊர்ப்பெயரிலேயே கல் இருக்கிறதே! இது எந்த நகர்?

3) போரை விரும்பா ஞானி இந்த ஊரில் பிறந்தார் என்றால் வியப்பாக இல்லையா?

4) இந்த நகருக்கு மதிப்பு தரும் அடைமொழி இருக்கிறது.

5) இந்த ஊர்ப் பெயரைக்கேட்டு 'கொல்' என்று சிரித்து விடாதீர்கள்.

6) இந்த நகரில் யாரும் 'கண் தானம்' செய்ய மாட்டார்கள்.

7) இந்த ஊர்ப் பெயரைக் கேட்டவுடனே வாயில் நீர் ஊறும்.

8) உங்களுக்கு அதிர்ஷ்டம் இல்லையா? கவலைப்பட வேண்டாம். இப்போதே இந்நகருக்குச் செல்லுங்களேன்.

9) கோடையில் 'ஜம்'மென்று இருக்க இந்தக் 'குளுகுளு' நகருக்குச் செல்லுங்களேன்.

10) இந்த ஊரில் தண்ணீர்ப் பஞ்சமே இல்லையோ?

11) கொஞ்சம் மரியாதைக் குறைவானாலும் நம்மை விரும்பி வரவேற்கும் இந்நகர் எது?

12) குருமாப் பிரியர்களுக்கு ஓர் ஊர்.

—என். முரளி.

விடைகள்:

(1) பம்'பாய்' (2) 'கல்'கத்தா (3) 'போர்'பந்தர் (4) 'ஸ்ரீ'நகர் (5) 'கொ'ல்லம் (6) 'ஐ'(Eye)தராபாத் (7) பூரி (8) 'லக்'னோ (Lucknow) (9) ஜம்மு (10) 'ஜலந்'தர் (11) விஜய'வாடா' (12) 'கோழி'க்கோடு



தெரியுமா?

2897 விக்டோரியா நீர் வீழ்ச்சி எந்த நதியினால் ஏற்படுகிறது...?

2898 ஒரு ரேடியனுக்கு இணையானது எவ்வளவு டிகிரி...?

2899 கீழ்த்திசை நாடுகளின் முத்து (Pearl of the Orient) என்று எந்த நாட்டைக் குறிப்பிடுவார்கள்.

2900 நைல் நதிப் பள்ளத்தாக்கின் முக்கிய விளை பொருள் என்ன..?

2901. பிரான்ஸ் தேசத்தை லூயி என்ற பெயரில் எத்தனை மன்னர்கள் அரசாண்டார்கள்?

2902. பாரட் (Parret) என்ற நதி இங்கிலாந்தின் எந்த மாகாணத்தில் உற்பத்தியாகிறது.

2903. ஸாண்டியாகோ நகரம் எந்த நாட்டிலுள்ளது.

2904. வெள்ளைக்கடல் (The White Sea) எந்த சமுத்திரத்தின் ஒரு பகுதியாகும்?

2905. பராகுவேயின் தலைநகரம் எது?

2906. பொலிவியாக் குடியரசு எந்தக் கண்டத்திலுள்ளது தெரியுமா?

2907. பிரபல எழுத்தாளரும் தலைவருமான மாக்கியவெல்லி (Machiavelli) என்பவர் எங்கு வாழ்ந்தவர்?

2908. புகழ்பெற்ற பதுவா நகரம் இத்தாலியில் எங்குள்ளது?

2909. மிஸோஜினிஸ்ட் (Misogynist) என்றால் என்ன?

2910. பூமியை ஒருமுறை சுற்றி வரச் சந்திரனுக்கு எத்தனை நாளாகிறது தெரியுமா?

2911. சூரியனுக்கும் பூமிக்கும்இடையிலுள்ள கிரகங்கள் எவை?

2912. கிறிஸ்துவ மத குருவான பிஷப்பின் தலையணிக்கு ஒரு பெயர் உண்டு. அது தெரியுமா?

2913. ஆர்டுவார்க் (Aardwark) என்ற பிராணியின் உணவு என்ன?

2914. பாபிலோனின் கடைசி மன்னரின் பெயர் தெரியுமா?

2915. கானரித் தீவுகள் எங்குள்ளன?

2916. லம்பாடிகள் என்போர் யார்?

2917. சூரியனிலிருந்து ஜூபிடரின் தூரம் எவ்வளவு மைல்கள்?

2918. ஜூரா மலைகள் (Jura Mountains) எங்குள்ளன?

2919 மெஸ்ஸினா துறைமுகம் (Port Messina) எங்குள்ளது?

2920 ஆக்டபஸ் என்ற ஜந்துவுக்கு எத்தனை கொடுக்குகள் உண்டு?

2921. பிரிட்டனின் பொருட்காட்சி சாலை பொதுமக்கள் பார்வைக்கு முதன் முதலில் திறந்து விடப்பட்டது எந்த ஆண்டில்?

2922. க்ளாஸோனே (Cloisonne) என்பது என்ன?

2923. இப்போது விசேஷமாகத் தபால் தலைகள் வெளியிடுவது போல முக்கியமான நிகழ்ச்சிகளைக் குறிக்க (Commamorate) முன்பு நாணயங்கள் வெளியிட்டார்கள், அப்படி வெளியிடப் பட்ட முதல் நாணயம் எப்போது யாரால்?

தெரியுமே!


2897. ஸாம்பஸி நதியினால். 2898. 57.2958 டிகிரி செ.கி. 2899. சிங்கப்பூரை. 2900. பருத்தி. 2901. பதினெட்டுப் பேர். 2902. டார்ஸெட் (Dorset) மாகாணத்தில். 2903. சிலி நாட்டில். 2904. ஆர்க்டிக் மகா சமுத்திரத்தின். 2905. ஆஸ்கூனியான் (Ascunnion) 2906. தென் அமெரிக்காவில். 2907. இத்தாலியிலுள்ள பிளாரன்ஸ் நகரில்.. 2908. வெனிஸின் மேற்குப் பகுதியில். 2909 பெண்களை வெறுப்பவர்களுக்கு இப்பெயர். 2910. இருபத்தியேழு நாட்களும் ஏழு மணி, நாற்பத்தி மூன்று நிமிஷங்களும். 2911. மெர்க்குரியும் வீனஸும். 2912. மீட்டர் (Mitre) என்று பெயர். 2913. இது ஒரு எறும்புத் தின்னி. ஆகவே எறும்புகளும் கறையான்களுமே இதன் உணவு. 2914. பெல்ஷஸார் (Belshazzar). 2915. அட்லாண்டிக் கடலில். 2916. ஐரோப்பாவில் வாழ்ந்த புராதன மக்கள். 2917. உத்தேசமாக483,000,000. மைல்கள். 2918. ரோன், ரைன் பள்ளத்தாக்குகளுக்கிடையில். 2919. ஸிஸிலியில். 2920. எட்டுக் கொடுக்குகள். 2921. முதன் முதலில் திறந்து விடப்பட்டது 1759ல். 2922. பூவேலை செய்யப்பட்ட ஒருவகை எனாமல். 2923. புராதன கிரேக்கர்கள், ரோமானியர்களின் காலத்தில் இம்மாதிரியான நாணயங்கள் வெளியிடப் பட்டன. (தலைப்பிலுள்ள படம்)

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press Guindy, Madras - 600032.
Editor: K. R. Athmanathan
GOKULAM FORTNIGHTLY, GUINDY, MADRAS - 600032

விந்தை உலகம்

ஆழி

தென் அமெரிக்காவில், அமேசான் நதியில் 'பிர்ரானா' என்னும் மீன்கள் இருக்கின்றன. ஒரு பிர்ரானா மீன், தூண்டிலில் மாட்டிக்கொண்டால் உடனே மற்ற பிர்ரானா மீன்கள் அதை விழுங்கித்து விடுகின்றன! எனவே, தூண்டில் போடுகிறவர்கள், மீன் மாட்டிக் கொண்டதும் உடனே மேலே இழுத்து விட வேண்டும்!






'பர்மா' என்று நாம் சொல்லுகிறோம். ஆங்கிலத்திலும் BURMA என்றுதான் எழுதப்படுகிறது. ஆனால், 'பர்மா' என்பது பர்மியச் சொல் அல்ல! **பம்மா** என்றுதான் பர்மியர்கள் சொல்லுவார்கள்! பர்மிய மொழியில் '**ர**' என்னும் எழுத்து இனமே கிடையாது!


ஒட்டகத்தின் வயிற்றிலுள்ள இரண்டாவது இரைப்பை பல நுண்ணறைகளை உடையது. அதில் பச்சை நிறமான திரவம் நிறைந்திருக்கும். பாலைவனத்தில் நீண்ட பிரயாணம் செய்யும்போது, தண்ணீர் கிடைக்காமல் போனால், பிரயாணிகள் தங்கள் ஒட்டகங்களின் வயிற்றை அறுத்து அந்தப் பச்சை நிறத் திரவத்தைக் குடித்துத் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுவார்கள்!



'டார்டிக்ராடா' என்னும் சிலந்தி 5 ஆண்டுகள் கூட உணவில்லாமல் உயிர் வாழும் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள்! அந்தச் சிலந்தி ஈரமான நிலத்தில் வாழும். நிலம் உலர்ந்ததும் அதுவும் உலர்ந்துவிடும். நிலம் ஈரமானதும் அது உயிர்த்து எழுந்து விடும்!



ஒரு பசுவின் அளவில் இருக்கும் ஒரு கரடியின் குட்டி எவ்வளவு பெரிது இருக்கும்? ஒரு கன்றுக்குட்டியின் அளவுக்கு இருக்குமா? இருக்காது! ஓர் எலியின் அளவே இருக்கும்!



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசியக் காசு

செல்வச் செழுமை வளர்ந்திடவே இந்தியன் பாங்கின் மற்றொரு செயல்திறன்திட்டம் — ரூ 300 கோடிகளுடன்.

இந்தியன் பாங்கின் புதிய சின்னம், உங்களுக்கும் நாட்டிற்கும் செல்வச் செழுமை ஏற்பட தனது பெரும் பணியைத் துவங்கிவிட்டது.

இந்தியன் பாங்க், ரூ. 300 கோடிகளுக்கு மேலான தனது கடனுதவித் திட்டத்தை நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறது. இத்திட்டத்தால் நாட்டிலுள்ள 163 மாவட்டங்கள் பயன்பெறுகின்றன.

ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பின்னரே இத் திட்டம் செயல்பட ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கேற்ற கச்சிதமான இத் திட்டத்தால்—நீர்ப்பாசனம், விவசாயம், குடிசைத்தொழில், சிறுதொழில்—இவற்றின் வளர்ச்சி பெருமளவில் ஏற்பட்டு பொருளாதாரம் மேம்படுகிறது. மேலும், இதனால் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் பலருக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுகிறது. இன்னும் கூறப்போனால், இத்திட்டம் செயல்படுவதால் லட்சக்கணக்கான நமது மக்களின் பொருளாதாரநிலை உயர்வுபடும்.

**இந்தியன் பாங்க்:
உங்கள் செல்வச் செழுமைக்கு
உதவும் வங்கி**



இந்தியன் பாங்க்
17, வடக்குக் கடற்கரைச்சாலை,
சென்னை 600 001.

IB/3131